# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

# நீதி நிருவாகம்

## கொள்கை விளக்கக் குறிப்பு 2023 - 2024

### மானியக் கோரிக்கை எண். 3


**எஸ். ரகுபதி**

சட்டத்துறை அமைச்சர்



©

தமிழ்நாடு அரசு

2023

# பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்க எண் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1-2 |
| 2. | நீதிமன்றங்களின் படிநிலை அமைப்பு | 2-3 |
| 3. | உயர்நீதிமன்றம், சென்னை மற்றும் அதன் மதுரைக்கிளை | 3-7 |
| 4. | நீதிமன்றங்களின் எண்ணிக்கை | 7-8 |
| 5. | புதிய நீதிமன்றங்களை ஏற்படுத்தல் | 9-11 |
| 6. | உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள், சென்னை | 11-14 |
| 7. | மாவட்ட நீதிமன்றங்கள் | 14-20 |
| 8. | சிறப்பு நீதிமன்றங்கள் | 20-46 |
| 9. | நடமாடும் நீதிமன்றங்கள் மூலம் போக்குவரத்து விதிமீறல் செலுத்துச் சீட்டு (Challan) வழக்குகளை தீர்ப்பது | 46-47 |
| 10. | அரசு தலைமை சொத்தாட்சியர் – பொறுப்பு சொத்தாட்சியர் | 47-49 |
| 11. | நீதிமன்ற மேலாளர்கள் | 50-51 |

| வ. எண் | பொருள் | பக்க எண் |
|---|---|---|
| 12. | நீதிமன்ற கட்டடங்கள், நீதிபதிகளின் குடியிருப்புகள் மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகள் | 51-56 |
| 13. | ஒன்றிய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டம் | 56-58 |
| 14. | நீதித்துறை அமைப்புகளை கணினிமயமாக்கும் திட்டம் | 58-62 |
| 15. | தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப வசதி | 62-64 |
| 16. | நீதித்துறை முத்திரைத்தாள் மின்னணுமயமாக்கல் | 64-66 |
| 17. | செலவினங்களின் வகைப்பாடு | 67 |
| 18. | தமிழ் வழியிலான சட்ட இதழ் | 67-68 |
| 19. | நீதித்துறை பயிற்சிக் கழகம் | 68-70 |
| 20. | உயர்நீதிமன்ற நடவடிக்கைகளில் தமிழ் மொழியை பயன்படுத்துதல் | 70-73 |
| 21. | தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதி | 74-75 |
| 22. | இளம் வழக்குரைஞர் உதவித் தொகை | 75-76 |

| வ. எண் | பொருள் | பக்க எண் |
|---|---|---|
| 23. | தமிழ்நாடு வழக்குரைஞர்களின் எழுத்தர்கள் நல நிதி | 76-77 |
| 24. | தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக்குழு | 77-95 |
| 25. | அரசு வழக்காடும் துறை, உயர்நீதிமன்றம், சென்னை | 95-97 |
| 26. | குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககம் | 97-111 |
| 27. | சிறப்பு குற்றவியல் / உரிமையியல் வழக்குரைஞர்கள் நியமனம் | 111-113 |
| 28. | முடிவுரை | 113-114 |
| 29. | பிற்சேர்க்கை I முதல் V வரை | 115-127 |

# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

# நீதி நிருவாகம்

# மானியக் கோரிக்கை எண். 3

# கொள்கை விளக்கக் குறிப்பு 2023 - 2024

## முன்னுரை

அனைத்து குடிமக்களுக்கும் விரைவான நீதியைப் பெறுவதே, நமது அரசியலமைப்பின் முதன்மையான நோக்கமாகும். மக்கள் நலன் என்பது, ஒரு பொதுநல அரசின் முதன்மையான அக்கறையாக இருக்க வேண்டும். நீதி நிர்வாகம் என்பது, பழங்காலத்திலிருந்தே எந்தவொரு மாநிலத்தின் முதன்மையான செயல்பாடுகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. நீதித்துறையின் சுதந்திரம் பேணப்படுவதையும், அதற்கான

உகந்த சூழ்நிலை நிலவுவதையும் உறுதி செய்ய, இந்த அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது. இதன் விளைவாக, பொதுமக்களுக்கான நீதியை விரைவாக வழங்குவதற்கு வசதியாக, கட்டடங்கள், மனிதவளம் மற்றும் பிற உட்கட்டமைப்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் போதுமான வசதிகளை உறுதி செய்ய, அரசாங்கம் எப்போதும் முயன்று வருகிறது.

**2. நீதிமன்றங்களின் படிநிலை அமைப்பு**

புதுதில்லியிலுள்ள இந்திய உச்ச நீதிமன்றம், நமது நாட்டின் முதன்மை நீதிமன்றமாக உள்ளது. இதன் கட்டுப்பாட்டின் கீழ் மாநிலங்களில் உள்ள அனைத்து

உயர்நீதிமன்றங்களும் செயல்படுகின்றன. இம்மாநிலத்திலுள்ள நீதித்துறையின் படிநிலை அமைப்பு பிற்சேர்க்கை I-ல் இணைக்கப்பட்டு உள்ளது.

## 3. உயர்நீதிமன்றம், சென்னை மற்றும் அதன் மதுரைக்கிளை

3.1. சென்னை உயர்நீதிமன்றம், மாநிலத்தின் உயரிய நீதி அமைப்பு ஆகும். இந்த உயர்நீதிமன்றத்திற்கு அனுமதிக்கப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கை 75. அவற்றுள், 59 நீதிபதிகளை கொண்டு தற்போது சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் அதன் மதுரைக் கிளை செயல்பட்டு வருகிறது. சென்னை உயர்நீதிமன்றம், உரிமையியல் வழக்குகளின் அசல் மனுக்களையும், சிறப்பு அசல்

மனுக்களையும் (நீதிப்பேராணை அதிகாரம்) மற்றும் உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளின் மேல் முறையீட்டினை விசாரணை செய்யும் அதிகாரங்களை பெற்றுள்ளது, சென்னை மாநகர எல்லைக்கு உட்பட்ட வழக்குகளில், ரூபாய் ஒரு கோடிக்கு அதிகமான மதிப்புள்ள வழக்குகளை உயர்நீதிமன்றம் விசாரிக்கிறது.

சென்னை உயர்நீதிமன்றத்தின் முதன்மை ஆயத்தின் அதிகார எல்லைக்குள், பின்வரும் 20 மாவட்டங்கள் உள்ளன:-

| வரிசை எண் | மாவட்டம் | வரிசை எண் | மாவட்டம் |
|---|---|---|---|
| 1. | சென்னை | 11. | கிருஷ்ணகிரி |
| 2. | திருவள்ளூர் | 12. | தர்மபுரி |
| 3. | காஞ்சிபுரம் | 13. | சேலம் |
| 4. | வேலூர் | 14. | நாமக்கல் |
| 5. | திருவண்ணாமலை | 15. | ஈரோடு |

| | | | |
|---|---|---|---|
| 6. | கடலூர் | 16. | திருப்பூர் |
| 7. | விழுப்புரம் | 17. | கோயம்புத்தூர் |
| 8. | நீலகிரி | 18. | திருவாரூர் |
| 9. | நாகப்பட்டினம் | 19. | அரியலூர் |
| 10. | பெரம்பலூர் | 20. | மயிலாடுதுறை |

**சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையின் அதிகார எல்லைக்குள், பின்வரும் 13 மாவட்டங்கள் உள்ளன:-**

| வரிசை எண் | மாவட்டம் | வரிசை எண் | மாவட்டம் |
|---|---|---|---|
| 1. | மதுரை | 8. | இராமநாதபுரம் |
| 2. | திண்டுக்கல் | 9. | விருதுநகர் |
| 3. | புதுக்கோட்டை | 10. | திருநெல்வேலி |
| 4. | தஞ்சாவூர் | 11. | தூத்துக்குடி |
| 5. | திருச்சிராப்பள்ளி | 12. | கன்னியாகுமரி |
| 6. | கரூர் | 13. | தேனி |
| 7. | சிவகங்கை | | |

**இம்மாவட்டங்களில் எழும் அசல் வழக்குகளின் அதிகார வரம்பினைத் தவிர, சென்னை உயர்நீதிமன்ற முதன்மை ஆயம் பெற்றுள்ள**

அனைத்து அதிகாரங்களையும் இந்நீதிமன்றம் கொண்டுள்ளது.

3.2. சென்னை உயர்நீதிமன்ற அதிகார எல்லைக்குள், புதுச்சேரி யூனியன் பகுதி நீதிமன்றங்களும் அடங்கும். புதுச்சேரி யூனியன் பகுதி தொடர்பான பணிகளைக் கவனிக்கும் அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் குறித்த செலவினம் முதற்கண் தமிழ்நாடு அரசால் மேற்கொள்ளப்பட்டு, பின்னர் அச்செலவுத் தொகை புதுச்சேரி அரசிடமிருந்து திரும்பப் பெறப்படுகிறது.

3.3. நீதி பரிபாலனம் செய்வதுடன், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி யூனியன் பகுதி உள்ளிட்ட அனைத்து சார்நிலை

நீதிமன்றங்களின் முழு நிருவாகப் பொறுப்பையும் சென்னை உயர்நீதிமன்றம் மேற்கொள்கிறது.

**4. நீதிமன்றங்களின் எண்ணிக்கை**

4.1. இம்மாநிலத்தில் தற்போது, சிறப்பு நீதிமன்றங்களையும் சேர்த்து, மொத்தம் 1330 நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. இவற்றுள், சென்னை மாநகரில் 151 நீதிமன்றங்களும், இதர மாவட்டங்களில் 1179 நீதிமன்றங்களும் இயங்கி வருகின்றன. சென்னை மாநகரம் மற்றும் இதர மாவட்டங்களில் செயல்பட்டு வரும் நீதிமன்றங்கள் / தீர்ப்பாயங்களின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள் முறையே பிற்சேர்க்கை–II மற்றும் III-ல் இணைக்கப்பட்டுள்ளன.

| வரிசை எண் | பதவியின் பெயர் | ஒப்பளிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை | தற்போதுள்ள நீதிபதிகளின் எண்ணிக்கை | காலியிடம் |
|---|---|---|---|---|
| 1. | மாவட்ட நீதிபதி | 343 | 267 | 76 |
| 2. | முதுநிலை உரிமையியல் நீதிபதி | 355 | 299 | 56 |
| 3. | உரிமையியல் நீதிபதி | 651 | 494 | 157 |
| | மொத்தம் | 1349 | 1060 | 289 |

4.2. 2023 ஆம் ஆண்டில், மாவட்ட நீதிபதி பதவியில் உள்ள 45 காலியிடங்களுக்கும், சிவில் நீதிபதிகள் பதவியில் உள்ள 245 காலியிடங்களுக்கும் முறையே சென்னை உயர்நீதிமன்றத்தின் ஆட்சேர்ப்பு பிரிவு மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஆகியவற்றின் மூலம் நேரடி நியமனம் மூலம் தேர்வு செய்ய, நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## 5. புதிய நீதிமன்றங்கள் ஏற்படுத்துதல்

2022-2023-ஆம் ஆண்டில், கீழ்க்கண்ட 29 புதிய நீதிமன்றங்கள் அமைப்பதற்காக, தொடரும் மற்றும் தொடரா செலவினத்துடன் கூடிய மொத்த செலவினம் ரூ.84.84 கோடியும், 1021 புதிய பணியிடங்களும் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

| வரிசை எண் | ஒப்பளிக்கப்பட்ட நீதிமன்றத்தின் வகை | நீதிமன்ற-ங்களின் எண்ணிக்கை | இடம்/மாவட்டம் |
|---|---|---|---|
| 1. | மாவட்ட நீதிபதி பதவி நிலையில் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் | 1 | அரக்கோணம் |
| 2. | மாவட்ட நீதிபதி பதவி நிலையில் 1989-ஆம் ஆண்டின் பட்டியல் சாதி / பட்டியல் பழங்குடியினர் (கொடுமை தடுப்புச்) சட்டத்திற்காக சிறப்பு நீதிமன்றம் | 1 | சேலம் |

| | | | |
|---|---|---|---|
| 3. | மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் | 6 | 1. கள்ளக்குறிச்சி<br>2.தென்காசி<br>3.இராணிப்பேட்டை<br>4.காஞ்சிபுரம்<br>5.மயிலாடுதுறை<br>6.திருப்பத்தூர் |
| 4. | சார்பு நீதிமன்றம் | 9 | 1. போடிநாயக்கனூர்<br>2.முசிறி<br>3.சீர்காழி<br>4.வந்தவாசி<br>5.திருக்கோயிலூர்<br>6.கொடுமுடி<br>7.சங்கராபுரம்<br>8.திருவைகுண்டம்<br>9.தாம்பரம் |
| 5. | சென்னை பெருநகர மத்திய குற்றப்பிரிவு வழக்குகளுக்காக சார்பு நீதிபதி பதவி நிலையில் ஒரு சிறப்பு நீதிமன்றம் | 1 | சென்னை |
| 6. | தலைமை குற்றவியல் நடுவர் | 1 | உதகமண்டலம் |
| 7. | மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் | 9 | 1. அணைக்கட்டு<br>2.கல்வராயன் மலை<br>3.குன்றத்தூர்<br>4.வண்டலூர்<br>5.கே.வி.குப்பம் |

| | | | |
|---|---|---|---|
| | | | 6.மொடக்குறிச்சி<br>7.விராலிமலை<br>8.கீழ்பெண்ணத்தூர்<br>9.வத்திராயிருப்பு |
| 8. | மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் | 1 | சேரன்மகாதேவி |
| | மொத்தம் | 29 | |

## 6. உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள், சென்னை

6.1. மாநகர உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகார வரம்பானது சென்னை மாநகர எல்லை முழுவதையும் கொண்டுள்ளது. வழக்கின் பண மதிப்பினை பொறுத்தமட்டில், உதவி நீதிபதிகள் ரூபாய் பத்து இலட்சம் வரையிலும், முதன்மை நீதிபதிகள், ரூபாய் பத்து இலட்சத்திற்கு மேல் ரூபாய் ஒரு கோடிக்கு மிகாமலும் வரும் வழக்குகளை விசாரிக்கும் அதிகார வரம்பினைப்

பெற்றுள்ளனர். சென்னை மாவட்ட அமர்வு பிரிவிற்கு, இந்நீதிமன்றமே அமர்வு நீதிமன்றமாகவும் செயல்பட்டு வருகிறது.

62. 1882-ஆம் ஆண்டின் மாகாண சிறு வழக்குகள் நீதிமன்றங்கள் சட்டத்தின் கீழ் வரும் சிறு வழக்குகளையும், 1988-ஆம் ஆண்டின் மோட்டார் வாகனச் சட்டம் தொடர்பான வழக்குகளையும் விசாரிக்க, சிறு வழக்குகள் நீதிமன்றங்கள் அதிகாரங்களை பெற்றுள்ளன.

- ஐந்தாவது மற்றும் ஆறாவது சிறு வழக்குகள் நீதிமன்றங்கள், மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் எழும் வழக்குகளை விசாரிக்கும் பிரத்யேக தீர்ப்பாயங்களாக செயல்படுகின்றன.

- தலைமை நீதிபதி மற்றும் இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது நீதிமன்றங்களின் நீதிபதிகள், சென்னை மாநகரில் 1988-ஆம் ஆண்டின் மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் எழும் வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தினை பெற்றுள்ளனர்.
- பத்து முதல் பதினாறு வரையுள்ள நீதிமன்றங்களின் நீதிபதிகள், வாடகை கட்டுப்பாட்டாளர்களாக (Rent Controllers) செயல்படுகின்றனர்.
- மேலும், தலைமை நீதிபதி மற்றும் ஏழு, எட்டு மற்றும் ஒன்பதாவது நீதிமன்றங்களின் நீதிபதிகள், வாடகை கட்டுப்பாடு தொடர்பான மேல்

முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தையும் பெற்றுள்ளனர்.

6.3. சென்னை மாநகரில் 37 பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் தற்போது இயங்கி வருகின்றன. பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் தங்களுடைய அதிகார வரம்புக்குட்பட்டு சென்னையில் குறிப்பிட்ட காவல் நிலைய எல்லைக்குட்பட்ட வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தை பெற்றுள்ளன.

**7. மாவட்ட நீதிமன்றங்கள்**

7.1. 92 மாவட்ட நீதிமன்றங்கள் (ஏற்கனவே விரைவு நீதிமன்றங்களாக இருந்த 49 கூடுதல் மாவட்ட நீதிமன்றங்கள் உட்பட) இம்மாநிலத்தில் இயங்கி வருகின்றன. வழக்கின் பண மதிப்பை பொறுத்தமட்டில் ரூபாய் பத்து இலட்சம் மற்றும்

அதற்கு மேல் உச்சவரம்பற்ற வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தினை மாவட்ட நீதிபதிகள் பெற்றுள்ளனர். மாநில தொழிலாளர் காப்புறுதிச் சட்டம், 1948, எஸ்டேட் ஒழிப்புச் சட்டம், 1948 மற்றும் மோட்டார் வாகனச் சட்டம், 1988 போன்ற சிறப்பு சட்டங்களின் கீழ் எழும் வழக்குகளை விசாரிக்கும் சிறப்புத் தீர்ப்பாயங்களாகவும், மாவட்ட நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. மாவட்ட நீதிபதிகள் அவரவர் பகுதிகளுக்கான அமர்வு நீதிமன்ற நீதிபதிகளாகவும் உள்ளனர். இவர்கள் தங்களது மாவட்டங்களில் எழக்கூடிய உரிமையியல் மேல் முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தையும், சார்நிலை நீதிமன்றங்களை ஆய்வு செய்யும் அதிகாரத்தையும் பெற்றுள்ளனர்.

7.2. மாநிலத்தில் 33 தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்நீதிமன்றங்களின் நிருவாக கட்டுப்பாட்டில் அந்தந்த மாவட்ட குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் இயங்குகின்றன. சில வகையான வழக்குகளில், உதவி அமர்வு நீதிபதிக்குரிய அதிகாரங்கள் தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளன. அந்தந்த மாவட்ட தலைமை குற்றவியல் நடுவர்கள் தங்கள் மாவட்டத்தில் உள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களில் ஆய்வினை மேற்கொள்வர்.

7.3. 173 சார்பு நீதிமன்றங்கள், இம்மாநிலத்தில் இயங்கி வருகின்றன. அவை ரூபாய் ஒரு இலட்சத்திற்கு மேலும் ரூபாய் பத்து இலட்சத்திற்கு மிகாமலும் பணமதிப்பு கொண்ட

அனைத்து உரிமையியல் வழக்குகளையும் விசாரிக்கும் அதிகாரத்தை பெற்றுள்ளன. மேலும், இந்நீதிமன்றங்கள், உதவி அமர்வு நீதிமன்றங்களாகவும் மற்றும் மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தீர்ப்பாயங்களாகவும் செயல்படுகின்றன. மேலும், இந்நீதிமன்றங்கள் தங்களது எல்லைக்கு உட்பட்ட மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்களின் முடிவிற்கு எதிராக தொடரப்படும் ரூபாய் ஒரு இலட்சம் வரையிலான பண மதிப்பு கொண்ட மேல்முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தையும் பெற்றுள்ளன.

7.4. 210 மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் இம்மாநிலத்தில் இயங்கி வருகின்றன. இந்நீதிமன்றங்கள் ரூபாய் ஒரு இலட்சம்

வரையிலான பண மதிப்புடைய வழக்குகளை விசாரிக்கும் அதிகார வரம்பை பெற்றுள்ளன. இந்நீதிமன்ற நீதிபதிகள் தங்கள் அதிகார வரம்புக்குட்பட்ட பகுதிகளுக்கு வாடகை கட்டுப்பாட்டாளர்களாகவும் செயலாற்று-கின்றனர். மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் ஒவ்வொன்றும் அதற்கென்று வரையறுக்கப்பட்ட அதிகார எல்லையை கொண்டுள்ளன. மேலும், அவை ரூபாய் இருபதாயிரம் பண மதிப்பு கொண்ட சிறு வழக்குகளையும் விசாரித்து வருகின்றன.

7.5. இம்மாநிலத்தில் ஏறக்குறைய அனைத்து வட்டங்களிலும், மொத்தம் 237 குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் இயங்கி

வருகின்றன. இந்நீதிமன்றங்களில் மூன்றாண்டிற்கு மேற்படாத சிறைத் தண்டனையோ அல்லது ரூபாய் பத்தாயிரத்திற்கு மிகையில்லாத அபராதமோ அல்லது இரண்டும் சேர்த்தோ விதிக்கக்கூடிய குற்ற வழக்குகள் மட்டுமே விசாரிக்கப்படுகின்றன.

7.6. பொதுமக்கள் தங்கள் வசிப்பிடங்களில் இருந்து உரிமையியல் சார்ந்த வழக்குகளை தொடுக்க வெகுதொலைவிற்கு பயணம் செய்து நீதிமன்றங்களை சென்றடையும் சிரமத்தை குறைப்பதற்காகவும், அடிப்படை நீதிமன்றமே இல்லாத வருவாய் வட்டங்களில் பொதுமக்களின் நன்மைக்காக, மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்

நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டு உள்ளன. இந்நீதிமன்றங்கள் உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளை விசாரிக்கின்றன. மாநிலத்தில் தற்போது 82 மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன.

## 8. சிறப்பு நீதிமன்றங்கள்

### 8.1. 1955-ஆம் ஆண்டின் குடிமை உரிமைகள் பாதுகாப்புச் சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம்

குடிமை உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1955-ன் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிக்க, கீழ்க்காணும் நான்கு சிறப்பு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன:-

1. கூடுதல் அமர்வு நீதிமன்றம்-I, திருச்சிராப்பள்ளி

2. கூடுதல் அமர்வு நீதிமன்றம்-I, தஞ்சாவூர்

3. கூடுதல் அமர்வு நீதிமன்றம்-II, திருநெல்வேலி

4. கூடுதல் அமர்வு நீதிமன்றம்-III, மதுரை

## 8.2. 1989-ஆம் ஆண்டின் பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம்

பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம், 1989-ன் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிப்பதற்கென, கீழ்க்காணும் இடங்களில் சிறப்பு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன:-

| வரிசை எண் | மாவட்டம் | வரிசை எண் | மாவட்டம் |
|---|---|---|---|
| 1. | விழுப்புரம் | 8. | தேனி |
| 2. | சிவகங்கை | 9. | திருவண்ணாமலை |
| 3. | திண்டுக்கல் | 10. | பெரம்பலூர் |
| 4. | இராமநாதபுரம் | 11. | தூத்துக்குடி |
| 5. | விருதுநகர் மாவட்டம் @ ஸ்ரீவில்லிப்புத்தூர் | 12. | வேலூர் |
| 6. | புதுக்கோட்டை | 13. | கடலூர் |
| 7. | நாமக்கல் | | |

இதர மாவட்டங்களில், அந்தந்த மாவட்டத்தில் உள்ள முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றங்களுக்கு மேற்குறிப்பிட்ட சட்டங்களின் கீழ் தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளின் மீது, விசாரணை மேற்கொள்வதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர், காஞ்சிபுரம் மாவட்டத்திற்காக செங்கல்பட்டிலும், திருவாரூர், திருப்பூர், சேலம், கன்னியாகுமரி மாவட்டத்திற்காக நாகர்கோயிலிலும், 1989-ஆம் ஆண்டைய பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிப்பதற்கென, மாவட்ட நீதிபதி நிலையிலான 6 சிறப்பு நீதிமன்றங்களை தோற்றுவித்து, அரசு ஆணையிட்டுள்ளது.

## 8.3. இனக்கலவரங்கள் தொடர்பான வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம்

தென்மாவட்ட இனக் கலவரம் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கென, மதுரையில் ஓர் அமர்வு நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது.

## 8.4. 2012-ஆம் ஆண்டின் பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம்

பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம், 2012-ன் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை குறிப்பாக விசாரிப்பதற்கென, கீழ்க்காணும் இடங்களில், சிறப்பு நீதிமன்றங்கள் தோற்றுவிக்கப்பட்டு உள்ளன:-

| வரிசை எண். | மாவட்டம் | வரிசை எண். | மாவட்டம் |
|---|---|---|---|
| 1. | சென்னை | 9. | சிவகங்கை |
| 2. | கோயம்புத்தூர் | 10. | தஞ்சாவூர் |
| 3. | கடலூர் | 11. | திருநெல்வேலி |
| 4. | காஞ்சிபுரம் @ செங்கல்பட்டு | 12. | திருவண்ணாமலை |
| 5. | கன்னியாகுமாரி @ நாகர்கோயில் | 13. | தூத்துக்குடி |
| 6. | மதுரை | 14. | வேலூர் |

| | | | |
|---|---|---|---|
| 7. | நாகப்பட்டினம் | 15. | விழுப்புரம் |
| 8. | சேலம் | 16. | விருதுநகர் @ ஸ்ரீவில்லிபுத்தூர் |

மேலும், திண்டுக்கல், தருமபுரி, தேனி மற்றும் திருவள்ளூர் ஆகிய நான்கு மாவட்டங்களில் மேற்கூறிய சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன.

### 8.5. வணிக நீதிமன்றங்கள் (Commercial Courts)

2015-ஆம் ஆண்டின் வணிக நீதிமன்றங்கள் சட்ட வழக்குகளை விசாரிப்பதற்கென புதியதாக ஏற்படுத்தப்பட்ட 5 வணிக நீதிமன்றங்களில், மூன்று நீதிமன்றங்கள் மாவட்ட நீதிபதி பதவி நிலையிலும் (அதாவது சென்னை, சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலும்) இரண்டு

நீதிமன்றங்கள் சார்பு நீதிபதி பதவி நிலையிலும் (அதாவது சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலும்) அமைக்கப்பட்டுள்ளன. மேலும், காஞ்சிபுரம் மாவட்டத்திற்காக செங்கல்பட்டில் மாவட்ட நீதிபதி பதவி நிலையில் ஒரு வணிக நீதிமன்றமும், சார்பு நீதிபதி பதவி நிலையில் ஒரு வணிக நீதிமன்றமும் அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது.

சார்பு நீதிபதி நிலையில் உள்ள வணிக நீதிமன்றம் மாவட்ட தலைநகரங்களில் தொடுக்கப்படும் வழக்குகளில் ரூபாய் மூன்று லட்சம் முதல் ரூபாய் இருபத்தைந்து லட்சம் வரையிலான பண மதிப்பு கொண்ட வணிக வழக்குகளை விசாரிக்கும்.

மாவட்ட நீதிபதி பதவி நிலையில் உள்ள வணிக நீதிமன்றம், ரூபாய் இருபத்தைந்து லட்சத்திற்கு மேற்பட்ட பண மதிப்பு கொண்ட வணிக வழக்குகளை தொடர்புடைய மாவட்ட எல்லைக்குட்பட்ட வழக்குகளை விசாரிக்கும். சென்னை மாவட்டத்தில் மாவட்ட நீதிபதி பதவி நிலையில் இயங்கும் வணிக நீதிமன்றம் ரூபாய் மூன்று லட்சம் முதல் ஒரு கோடி வரையிலான பண மதிப்பு கொண்ட வணிக வழக்குகளை விசாரிக்கும். இவ்விவரம் அட்டவணை-III-ல் இணைக்கப்பட்டுள்ளது.

### 8.6. தொழிலாளர் நீதிமன்றங்கள்

மாநிலத்தில் 17 தொழிலாளர் நல நீதிமன்றங்கள் மற்றும் ஒரு தொழில் வழக்கு

தீர்ப்பாயம் செயல்பட்டு வருகின்றன. இந்நீதிமன்றங்கள் தொழிலாளர் குறித்த சர்ச்சைகளையும், பாதிக்கப்பட்டவர்கள் தாக்கல் செய்யும் உரிமை கோரிக்கை மனுக்களையும் விசாரித்து தீர்ப்பு வழங்குகின்றன. இவ்விவரம் அட்டவணை-III-ல் இணைக்கப்பட்டுள்ளது.

**8.7. குடும்பநல நீதிமன்றங்கள்**

மாநிலத்தில் 40 குடும்பநல நீதிமன்றங்கள், திருமணம் மற்றும் குடும்ப விவகாரங்கள் தொடர்பான வழக்குகளில் இணக்கத்தை மேம்படுத்தவும் மற்றும் அவ்வழக்குகளை விரைந்து முடிக்கவும் 1984-ஆம் ஆண்டின் குடும்பநல நீதிமன்றங்கள் சட்டத்தின் கீழ் செயல்பட்டு வருகின்றன. இவ்விவரம் அட்டவணை-III-ல் இணைக்கப்பட்டுள்ளது.

## 8.8. மகளிர் நீதிமன்றங்கள்

இம்மாநிலத்தில் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்ற வழக்குகளை குறிப்பாக விசாரிப்பதற்கென 10 மகளிர் நீதிமன்றங்கள் மற்றும் 22 மகளிர் விரைவு நீதிமன்றங்கள், மாவட்ட நீதிபதி பதவி நிலையிலும், மேலும், 32 கூடுதல் மகளிர் நீதிமன்றங்கள் குற்றவியல் நடுவர் நிலையிலும் செயல்பட்டு வருகின்றன. இந்த விவரம் அட்டவணை-III-ல் இணைக்கப்பட்டுள்ளது.

## 8.9. 2005-ஆம் ஆண்டின் குடும்ப வன்முறை சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம்

குடும்ப வன்முறை சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிப்பதற்கென,

ஒரு சிறப்பு நீதிமன்றம் கோயம்புத்தூரில் செயல்பட்டு வருகிறது.

## 8.10. பொருளாதார குற்ற வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள்

பொருளாதார குற்றங்கள் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கான மூன்று சிறப்பு நீதிமன்றங்களில், இரண்டு சென்னையிலும், ஒன்று மதுரையிலும் செயல்பட்டு வருகின்றன.

## 8.11. போலி முத்திரைத்தாள் மற்றும் கள்ள நோட்டு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள்

போலி முத்திரைத்தாள் மற்றும் கள்ள நோட்டு தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கென, சென்னையில் ஒரு சிறப்பு நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது.

**8.12. 1997-ஆம் ஆண்டின் தமிழ்நாடு வைப்பீட்டுதாரர்கள் (நிதி நிறுவனங்களில்) பாதுகாப்புச் சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள்**

தமிழ்நாடு வைப்பீட்டுதாரர்கள் (நிதி நிறுவனங்களில்) பாதுகாப்புச் சட்டம், 1997-ன் கீழ் பதிவு செய்யப்படும் குற்றங்கள் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கு, சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் மூன்று சிறப்பு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

**8.13. 1955-ஆம் ஆண்டின் அத்தியாவசியப் பொருட்கள் சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள்**

அத்தியாவசியப் பொருட்கள் சட்டம், 1955-ன் கீழ் பதிவாகும் வழக்குகளை குறிப்பாக விசாரிக்க,

கீழ்க்காணும் இடங்களில் சிறப்பு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன:-

| வரிசை எண் | மாவட்டம் | வரிசை எண் | மாவட்டம் |
|---|---|---|---|
| 1. | சென்னை | 4. | புதுக்கோட்டை |
| 2. | மதுரை | 5. | சேலம் |
| 3. | கோயம்புத்தூர் | 6. | தஞ்சாவூர் |

### 8.14. மத்திய குற்றப்புலனாய்வுப் பிரிவின் (Central Bureau of Investigation) வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள்

மாநிலத்தில் மத்திய குற்றப்பிரிவு புலனாய்வு வழக்குகளை விசாரிப்பதற்கென குறிப்பாக 8 சிறப்பு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றுள், சென்னையில் 6 நீதிமன்றங்களும், மதுரை மற்றும்

கோயம்புத்தூரில் தலா ஒரு நீதிமன்றமும் உள்ளன. இவற்றுள், வங்கிகள் மற்றும் நிதி நிறுவன மோசடி தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கான ஒரு சிறப்பு நீதிமன்றம் சென்னையில் செயல்பட்டு வருகிறது.

**8.15. 1978-ஆம் ஆண்டின் பரிசுச் சீட்டு மற்றும் பணச்சுழற்சி திட்ட (தடை) சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம்**

1978-ஆம் ஆண்டைய பரிசுச் சீட்டு மற்றும் பணச்சுழற்சி திட்ட (தடை) சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை (CBCID) குற்ற வழக்கு எண்.3876/2009-ஐ விசாரிப்பதற்கென, சென்னையில் ஒரு சிறப்பு நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது.

## 8.16. 1988-ஆம் ஆண்டின் ஊழல் தடுப்புச் சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள்

1988-ஆம் ஆண்டைய ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் (மையச் சட்டம் 49/1988) பதிவு செய்யப்படும் வழக்குகளை குறிப்பாக விசாரிப்பதற்கென, கீழ்க்காணும் இடங்களில் 8 சிறப்பு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன:-

| வரிசை எண். | மாவட்டம் | வரிசை எண். | மாவட்டம் |
|---|---|---|---|
| 1. | சென்னை | 5. | விழுப்புரம் |
| 2. | மதுரை | 6. | சேலம் |
| 3. | கோயம்புத்தூர் | 7. | சிவகங்கை |
| 4. | திருச்சிராப்பள்ளி | 8. | திருநெல்வேலி |

## 8.17. சென்னை பெருநகர மத்திய குற்றப்பிரிவு மற்றும் குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம்

சென்னையில் ஒரு சிறப்பு நீதிமன்றம் மத்திய குற்றப்பிரிவால் பதிவு செய்யப்படும் மோசடி வழக்குகள் மற்றும் குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் (CBCID) துறையின் சென்னை மாநகர வழக்குகளை குறிப்பாக விசாரணை செய்வதற்காக, சார்பு நீதிபதி பதவி நிலையில், அமைக்கப்பட்டு உள்ளது. மேலும், சார்பு நீதிபதி பதவி நிலையில், சென்னை பெருநகர காவல் ஆணையரக மத்திய குற்றப் பிரிவு வழக்குகளை விசாரிப்பதற்கென ஒரு சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளது.

## 8.18. சந்தனக்கட்டை / வனக் குற்றங்கள் தொடர்பான குற்ற வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம்

திருப்பத்தூரில் சந்தனக்கட்டை தொடர்பான குற்ற வழக்குகளை விசாரிப்பதற்கென ஒரு சிறப்பு குற்றவியல் நடுவர் நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது. மேலும், கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் வனக் குற்றங்கள் (Forest Offences) தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கென, ஒரு சிறப்பு நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது.

## 8.19. 1985-ஆம் ஆண்டின் போதை மருந்துகள் மற்றும் மன மயக்க பொருட்கள் சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள்

போதை மருந்துகள் மற்றும் மன மயக்க பொருட்கள் சட்டம், 1985-ன் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை, குறிப்பாக விசாரிப்பதற்காக, சென்னை மற்றும் மதுரை ஆகிய இடங்களில் தலா இரண்டு வீதம், நான்கு சிறப்பு நீதிமன்றங்களும் மற்றும் விழுப்புரத்தில் ஒரு நீதிமன்றமும் செயல்பட்டு வருகின்றன.

சென்னை, மதுரை, கோயம்புத்தூர், புதுக்கோட்டை, சேலம் மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் செயல்பட்டு வரும் அத்தியாவசியப் பொருட்கள் சட்ட

வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்களுக்கு, 1985-ஆம் ஆண்டின் போதை மருந்துகள் மற்றும் மன மயக்க பொருட்கள் சட்ட வழக்குகளை விசாரிக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**8.20. 1987-ஆம் ஆண்டின் பயங்கரவாத மற்றும் சீர்குலைவு நடவடிக்கைகள் (தடுப்பு) சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள்**

சென்னையில் இரண்டு சிறப்பு நீதிமன்றங்கள் (முதலாவது மற்றும் ஐந்தாவது கூடுதல் நீதிபதி) பயங்கரவாத மற்றும் சீர்குலைவு நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டம், 1987 (தற்போது நீக்கப்பட்டது) (repealed)) கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளை விசாரிப்பதற்கு செயல்பட்டு வருகின்றன.

### 8.21. கோயம்புத்தூரில் குண்டு வெடிப்பு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள்

சென்னை மற்றும் கோயம்புத்தூரில் குண்டு வெடிப்பு வழக்குகளை குறிப்பாக விசாரணை செய்வதற்காக இரண்டு சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு உள்ளன. சென்னை பூவிருந்தவல்லியில் செயல்படும் இந்நீதிமன்றம் பொடா சட்டம், 2002 (மையச் சட்டம் 15/2002)-ன் கீழ் வரும் குற்றங்கள் தொடர்பான வழக்குகளையும் விசாரணை செய்கிறது.

### 8.22. சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம்

சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (D&R) சட்ட மீறல்கள் தொடர்பான வழக்குகளை

விசாரிப்பதற்கென, ஒரு சிறப்பு நீதிமன்றம் மதுரையில் செயல்பட்டு வருகிறது.

### 8.23. நில அபகரிப்பு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள்

சென்னையில் இரு சிறப்பு நீதிமன்றங்கள் உட்பட 26 சிறப்பு நீதிமன்றங்கள் நில அபகரிப்பு வழக்குகளை விசாரிப்பதற்கென, ஒப்பளிக்கப்பட்டுள்ளன. இவற்றில், 23 சிறப்பு நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. இதன் விவரம் பிற்சேர்க்கை IV-ல் இணைக்கப்பட்டு உள்ளது.

### 8.24. சட்டமன்ற மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதான குற்றவியல் வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம்

சென்னையில் இரண்டு சிறப்பு நீதிமன்றங்களும் மற்றும் ஒரு கூடுதல் சிறப்பு

நீதிமன்றமும், தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதான குற்றவியல் வழக்குகளை விசாரிப்பதற்கென செயல்பட்டு வருகின்றன. இதர மாவட்டங்களில் உள்ள குற்றவியல் நடுவர் நீதிபதிகளுக்கு, தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதான குற்றவியல் வழக்குகளை விசாரிப்பதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### 8.25. மோட்டார் வாகன விபத்து இழப்பீடு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம்

இம்மாநிலத்தில், மோட்டார் வாகன விபத்து இழப்பீடு அசல் மனு மற்றும் நிலம் கையகப்படுத்துதல் போன்ற அசல் மனுக்கள் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கென 30

சிறப்பு நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. இது தவிர, மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோருரிமை தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கென கூடுதலாக 8 நீதிமன்றங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன.

### 8.26. நிலஎடுப்பு அசல் வழக்குகளை விசாரிப்பதற்காக சிறப்பு நீதிமன்றங்கள்

நில எடுப்பு அசல் வழக்குகளை விசாரிப்பதற்காக, 6 சிறப்பு நீதிமன்றங்கள் பின்வரும் இடங்களில் செயல்பட்டு வருகிறது:-

| வரிசை எண் | மாவட்டம் | வரிசை எண். | மாவட்டம் |
|---|---|---|---|
| 1. | அரியலூர்-2 | 3. | வேலூர்-2 |
| 2. | கடலூர்-1 | 4. | திருவள்ளூர்-1 |

### 8.27. 1881-ஆம் ஆண்டின் மாற்றுரிமை ஆவணச் சட்டத்திற்கான சிறப்பு நீதிமன்றம்

1881-ஆம் ஆண்டின் மாற்றுரிமை ஆவணச் சட்டத்தின் வழக்குகளை விசாரிக்க 2 சிறப்பு நீதிமன்றங்கள் செயல்பட்டுவருகின்றன.

### 8.28. சிலை கடத்தல் வழக்களுக்கான சிறப்பு நீதிமன்றம்

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் சிலை கடத்தல் வழக்குகளை விசாரிப்பதற்காக கூடுதல் தலைமை குற்றவியல் நடுவர் நிலையில் ஒரு சிறப்பு நீதிமன்றம் இயங்கி வருகிறது.

## 8.29. விரைவு நீதிமன்றங்கள்

இந்த மாநிலத்தில் உள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள குற்ற வழக்குகளை தீர்ப்பதற்காக, 39 விரைவு நீதிமன்றங்கள் இந்த மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன.

## 8.30. கூடுதல் மாஸ்டர் நீதிமன்றங்கள்

10 கூடுதல் மாஸ்டர் நீதிமன்றங்கள் உள்ளன. அவை சென்னை உயர் நீதிமன்றத்திற்காக நான்கு நீதிமன்றங்களும், சென்னை நகர உரிமையியல் நீதிமன்றத்திற்கு நான்கு நீதிமன்றங்களும், சென்னை சிறு வழக்கு நீதிமன்றத்திற்கு இரண்டு நீதிமன்றங்களும் இயங்கி வருகின்றன. இந்த

நீதிமன்றங்கள் அசல் வழக்குகளில் வழக்காடிகளுக்கு அழைப்பாணை அனுப்பி, அவர்களின் சாட்சியங்களை பதிவு செய்து, தொடர்புடைய நீதிமன்றங்களுக்கு, தொடர் நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கின்றன.

### 8.31. மோட்டார் வாகனச் சட்ட வழக்குகளுக்கான நடமாடும் நீதிமன்றங்கள்

1988-ஆம் ஆண்டின் மோட்டார் வாகனச் சட்டத்தின் (மத்திய சட்டம் 59/1988) கீழான வழக்குகள் மற்றும் சிறு குற்றங்கள் மற்றும் ஏனைய சட்டங்கள் தொடர்பான சிறு வழக்குகளை விசாரிக்க கீழ்க்காணும் இடங்களில் நடமாடும் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன:-

| வரிசை எண். | மாவட்டம் | வரிசை எண். | மாவட்டம் |
|---|---|---|---|
| 1. | சென்னை-2 | 7. | நாமக்கல் |
| 2. | காஞ்சிபுரம் | 8. | சேலம் |
| 3. | விழுப்புரம் | 9. | ஈரோடு |
| 4. | கோயம்புத்தூர் | 10. | திண்டுக்கல் |
| 5. | திருச்சிராப்பள்ளி | 11. | திருநெல்வேலி |
| 6. | மதுரை | | |

**9. நடமாடும் நீதிமன்றங்கள் மூலம் போக்குவரத்து விதிமீறல் செலுத்துச் சீட்டு (Challan) வழக்குகளை தீர்ப்பது**

சென்னை மாவட்டத்தில் உள்ள XXI மற்றும் XXII பெருநகர குற்றவியல் நீதிமன்றங்கள் மெய்நிகர் (Virtual) முறையில் நடமாடும் நீதிமன்றங்களாக செயல்படுகின்றன. மேலும், 1,12,347 போக்குவரத்து விதிமீறல் வழக்குகள் தீர்க்கப்பட்டன. அபராதத் தொகை ரூ.43,89,04,870/- மின்னணு பரிவர்த்தனை மூலமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

## 10. **அரசு தலைமை சொத்தாட்சியர் - பொறுப்பு சொத்தாட்சியர்**

10.1 அறக்கட்டளைகளின் சொத்துக்களுக்கும் உரிய வயதடையாதவர்கள் மற்றும் காலமானவர்களின் எஸ்டேட் சொத்துக்களுக்கும் பொறுப்பு வகிப்பதற்காக சென்னையில் மாவட்ட நீதிபதி பதவி நிலையில், அரசு தலைமை சொத்தாட்சியர் - பொறுப்பு சொத்தாட்சியர் இருக்கின்றார். இவருக்கு உதவியாக உரிமையியல் நீதிபதி பதவி நிலையில் துணைத் தலைமை சொத்தாட்சியர் - பொறுப்பு சொத்தாட்சியர் உள்ளார்.

10.2. அரசு தலைமை சொத்தாட்சியர் அரசு உடமையாக்கப்பட்ட வங்கிகளில் வைக்கப்பட்டு உள்ள ரூ.3.65 கோடி பணமதிப்புள்ள 39 இறந்த

நபர்களின் 907 நிரந்தர வைப்பு நிதித் தொகைகளையும் பராமரித்து, நிர்வகித்து வருகிறார். மேலும், இவர்களின் அறக்கட்டளை சொத்துகளையும் நிர்வகித்து வருகிறார்.

10.3. பொறுப்பு சொத்தாட்சியர் அரசு உடமையாக்கப்பட்ட வங்கிகளில் வைக்கப்பட்டு உள்ள ரூ.78.17 கோடி பணமதிப்புள்ள 160 இறந்த நபர்களின் 4113 நிரந்தர வைப்பு நிதித் தொகைகளையும் பராமரித்து, நிர்வகித்து வருகிறார். மேலும், இவர்களின் அறக்கட்டளை சொத்துகளையும் நிர்வகித்து வருகிறார்.

10.4. அறக்கட்டளை சொத்திலிருந்து வாடகை வருமானம் மற்றும் நிலை வைப்புத் தொகையிலிருந்து பெறப்படும் வட்டி

வருமானம் ஆகியவை கீழ்க்கண்ட பரோபகார நற்செயல்களுக்கு (Philanthropic activities) பயன்படுத்தப்படுகிறது:-

i. அறச்செயல்கள் மற்றும் பயனாளிகள் பராமரிப்பு.

ii. மாணவர் உதவித் தொகை.

iii. சொத்தாட்சியர் அலுவலக பணியாளர்களின் சம்பளம்.

iv. வருமான வரி மற்றும் இதர அவசிய செலவிற்காக அரசுக்கு செலுத்த வேண்டிய சட்டப்படியான கட்டணங்கள்.

v. சென்னை உயர்நீதிமன்ற ஆணைப்படி, பொருள் (articles), மருத்துவ உபகரணங்கள் போன்ற இனங்களுக்காக செலவிடப்படும் சிறப்பு நன்கொடை.

## 11.. நீதிமன்ற மேலாளர்கள்

விரைவாக நீதி வழங்குதலை மேம்படுத்தும் பொருட்டு, ஒன்றிய அரசின் 13-வது நிதிக்குழுவின் பரிந்துரையின்படி, உதவிப் பதிவாளர் பதவி நிலையில் நீதிமன்ற மேலாளர் பணியிடம், மார்ச் 2011-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இப்பணியிடமானது, எம்.பி.ஏ. முதுகலை பட்டம் பெற்ற தகுதி வாய்ந்த நபர்களை கொண்டு நிரப்பப்படுகிறது. இவர்கள் நீதிபதிகளின் நிர்வாகப் பணிகளில் உதவுவதன் மூலம் நீதிபதிகளுக்கு நீதிப்பணிகளில் (judicial functions) அதிக நேரத்தை செலவிட வழிவகுக்கிறது.

தற்போது, சென்னை உயர்நீதிமன்றத்தின் முதன்மை ஆயம், அதன் மதுரைக் கிளை மற்றும் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றங்களில் 41 நீதிமன்ற மேலாளர் பணியிடங்கள் உருவாக்கப்பட்டு நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

## 12. நீதிமன்ற கட்டடங்கள், நீதிபதிகளின் குடியிருப்புகள் மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகள்

2022-2023ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள், நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகளுக்காக ரூ.572.71 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:-

| வரிசை எண். | திட்டத்தின் பெயர் | தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1. | சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் 9 மாடி கட்டடம் கட்டுதல் | 20.25 |
| 2. | சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற கிளையில் குளிர் சாதன வசதி செய்தல் | 6.74 |
| 3. | செங்கல்பட்டில் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடத்தை புதுப்பித்தல் | 2.39 |
| 4. | கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடம் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்பு கட்டுதவதற்கு திருத்திய நிர்வாக ஒப்பளிப்பு அளித்தல் | 1.85 |
| 5. | விருதுநகர் மாவட்டம் விருதுநகரில் உள்ள ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடத்திற்கு சுற்றுச் சுவர் கட்டுதல் | 0.46 |
| 6. | ஈரோடு மாவட்டம் கோபிசெட்டி பாளையத்தில் உள்ள ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடத்தில் நடைபாதை கற்கள் (Paver Block) பதித்தல் மற்றும் கழிவுநீர் வடிகால் அமைத்தல் | 0.83 |

| | | |
|---|---|---|
| 7. | தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டையில் உள்ள ஒருங்கிணைந்த நீதிமன்றத்தில் இருசக்கர வாகன கொட்டகை அமைத்தல் மற்றும் பொதுக் கழிவறையை சீர்செய்தல் | 0.11 |
| 8. | சென்னை மாவட்டத்தில் உள்ள உரிமையியல் நீதிமன்றங்களை ஒரே கட்டடத்தில் அமர்த்த பலமாடிக் கட்டடம் கட்டுதல் | 315.00 |
| 9. | கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள வணிக நீதிமன்றம் மற்றும் வணிக மேல்முறையீட்டு நீதிமன்றம் ஆகியவற்றை மாநகராட்சி சமுதாய கட்டடத்தில் அமர்த்த கட்டட மற்றும் மின்வசதி செய்து கொடுத்தல் | 0.96 |
| 10. | திருவண்ணாமலை மாவட்டம் செங்கத்தில் உள்ள ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடத்திற்கு அணுகு பாதை, விருந்தினர் அறை, பணியாளர் உணவறை, நான்கு சக்கர வாகன நிறுத்துமிடம் மற்றும் இரண்டு சக்கர வாகன கொட்டகை அமைத்தல் | 53.58 |
| 11. | சென்னை மாவட்டம் சைதாப்பேட்டையில் புதியதாக கட்டப்பட்ட மாநகர குற்றவியல் | 1.28 |

| | | |
|---|---|---|
| | நடுவர் நீதிமன்றத்தில் கூடுதல் வசதிகளை ஏற்படுத்துதல் | |
| 12. | மதுரையில் உள்ள மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் உள்ள வழக்குரைஞர் அறைக்கான தனிக்கட்டடத்திற்கு மின் வசதி செய்து கொடுத்தல். | 0.43 |
| 13. | திருவண்ணாமலையில் உள்ள ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கு மின்தூக்கி அமைத்தல் | 0.78 |
| 14. | திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர், வேலூர் மாவட்டம் சத்துவாச்சாரி மற்றும் திருவள்ளூர் மாவட்டம் திருவள்ளூரில் உள்ள ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடத்தில் மின்தூக்கி வசதி அமைத்தல் | 0.78 |
| 15. | வேலூர் மாவட்டம் சோளிங்கரில் உள்ள ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடத்திற்கு அணுகுபாதை மற்றும் சுற்றுச்சுவர் அமைத்தல் | 0.47 |
| 16. | தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள மிக முக்கிய நபர்களுக்கான விருந்தினர் மாளிகைக்கு கூடுதல் வசதிகள் செய்தல். | 0.80 |

| | | |
|---|---|---|
| 17. | மதுரை மாநகரில் உள்ள மாவட்ட நீதிமன்ற கட்டடத்தில் மூன்று தளம் கொண்ட கூடுதல் நீதிமன்ற கட்டடம் கட்டுதல் | 166.00 |
| | மொத்தம் | 572.71 |

நீதிமன்ற சொந்த கட்டடங்கள், அரசு கட்டடங்கள் மற்றும் வாடகை கட்டடங்கள் ஆகியவற்றில் இயங்கும் நீதிமன்றங்களின் விவரம் பின்வருமாறு:-

| வரிசை எண் | நீதிமன்ற கட்டடங்களின் வகைகள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | சொந்த கட்டடம் | 1036 |
| 2. | அரசு கட்டடம் | 106 |
| 3. | தனியார் வாடகை கட்டடம் | 73 |
| | மொத்தம் | 1215 |

சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சார்நிலை நீதிமன்றங்களுக்கு உட்கட்டமைப்பு மற்றும் இதர வசதிகளின் தேவைக்கு ஏற்ப, அவ்வப்போது அரசு நிதி ஒப்பளிப்பு செய்து வருகிறது.

## 13. ஒன்றிய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டம்

ஒன்றிய அரசின் நீதித்துறையானது, நீதிமன்றங்களின் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு, நீதிமன்றங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான "மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டம்" என்ற திட்டத்தினை மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு நிதி உதவி அளித்து, செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம், சார்நிலை

நீதிமன்றங்களுக்கான கட்டடங்கள் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகளை கட்டுவதன் மூலம் நீதி வழங்குதலை மேம்படுத்த உதவுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் பகிர்ந்தளிக்கப்படும் நிதி உதவி 2015-2016-ஆம் ஆண்டு முதல் 60:40 என்கிற விகிதத்தில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் சார்நிலை நீதிமன்றங்களுக்கான கட்டடங்கள் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகளை கட்டுவதன் மூலம் விரைந்து நீதி வழங்குவதற்கு வழிவகை செய்கிறது. ஒன்றிய அரசு 2022-2023 ஆம் நிதியாண்டிற்கு தமது 60 சதவீத பங்களிப்பு தொகையாக ரூ.133.85 கோடியினை விடுவித்துள்ளது. அவ்வாறே, மாநில அரசும், தனது 40 சதவீத பங்களிப்பு

தொகையாக ரூ.89.24 கோடியினை சேர்த்து, மொத்தம் ரூ.223.09 கோடிக்கு "நடைபெற்று வரும் திட்டங்கள்" (Ongoing Schemes) மற்றும் "புதிய திட்டங்களை" (New Schemes) ஆகியவற்றை செயல்படுத்த நிதி ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

## 14. நீதித்துறை அமைப்புகளை கணினிமயமாக்கும் திட்டம்

14.1. நாட்டில் உள்ள உயர்நீதிமன்றங்கள் மற்றும் மாவட்ட / சார்நிலை நீதிமன்றங்களை கணினி மயமாக்கும் திட்டங்களில் ஒருங்கிணைந்த கணினிமயமாக்கும் திட்டமும் ஒன்றாகும். இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள்களாவன:-

- ❖ நீதிமன்றங்களில் நாள் தோறும் நடைபெறும் நீதிமன்ற நிருவாகத்தினை சிறப்பாக முறைப்படுத்த உதவுதல்.
- ❖ நிலுவையில் உள்ள வழக்குகளை குறைக்கும் பொருட்டு நீதிமன்ற நிருவாகத்திற்கு உதவுதல்.
- ❖ வழக்கு தொடுப்பவர்களுக்கு வெளிப்படையான தகவல் அளித்தல்.
- ❖ நீதிபதிகளுக்கு சட்டம் மற்றும் நீதித்துறை சார்ந்த தரவுகளை பெற வழிவகை செய்தல்.

14.2. மின்னணு நீதிமன்றங்களின் வழிமுறை திட்டத்தின் கீழ், மாண்புமிகு உச்ச நீதிமன்றம் மின்னணு குழுமம், இந்தியா முழுவதும் உள்ள கீழ்நிலை நீதிமன்றங்களை

கணினிமயமாக்கும் பணியை மேற்கொண்டு உள்ளது.

- மின்னணு நீதிமன்ற திட்டங்களின் கீழ் முதல் கட்டமாக, 675 சார்நிலை நீதிமன்றங்களுக்கு கணினிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் வழங்கப்பட்டு, நிறுவப்பட்டன.
- 500 சார்நிலை நீதிமன்றங்களுக்கு, பழைய கணினிகளுக்கு பதிலாக புதியதாக கணினிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் ரூ.8.97 கோடி செலவில் வழங்கப்பட்டு, நிறுவப்பட்டன.

- மேலும், இதன் தொடர்ச்சியாக மேற்காண் திட்டத்தின் இரண்டாம் கட்டமாக, 1032 சார்நிலை நீதிமன்றங்களுக்கு கணினிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் வழங்கப்பட்டு, நிறுவப்பட்டன.

14.3. மாண்புமிகு நீதிபதிகளின் பயன்பாட்டிற்காக வாங்கப்பட்ட, பழைய மேசை கணினிகள் மற்றும் பிற தகவல் தொழில்நுட்ப சாதனங்களுக்கு பதிலாக, தடையில்லா மின்சார வினியோகத்துடன் கூடிய 75 மேசை கணினிகள், 75 அச்சுப்பொறி மற்றும் 150 பல்வகை செயல்பாடு சாதனம் ஆகியவற்றை கொள்முதல் செய்ய ரூபாய் 98 இலட்சத்திற்கு அரசு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது.

14.4 மேலும், இம்மாநிலத்தில் புதிதாக பணியமர்த்தப்பட்ட 64 நீதிபதிகளின் பயன்பாட்டிற்காக, மடிக்கணினிகள் மற்றும் அச்சுப்பொறிகள் வாங்குவதற்கு ரூபாய் 83.84 இலட்சத்திற்கு நிதி ஒப்புதல் அளித்துள்ளது.

## 15. தகவல் மற்றும் தொடர்பு தொழில் நுட்ப வசதி

- சென்னை உயர்நீதிமன்றத்திற்கு அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய மேசை கணினிகளை வாங்குவதற்கு ரூ.2.06 கோடிக்கு அரசு நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது.

- மாண்புமிகு உயர்நீதிமன்ற நீதிபதிகளின் பயன்பாட்டிற்காக மைக்ரோசாப்ட் குழு வீடியோ

கலந்துரையாடல் உரிமம் பெற ரூ.20.61 லட்சத்திற்கு அரசு நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது.

- 437 பயோ மெட்ரிக் இயந்திரங்களை சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சார்நிலை நீதிமன்ற பணியாளர்களின் வருகையை பதிவு செய்வதற்கு ரூ.5.73 லட்சம் செலவில் வாங்குவதற்கு, அரசு நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது.

- வேலூர் மாவட்டம் சோளிங்கர் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டிடத்திற்கு Local Area Network

வசதிக்காக ரூ.3.56 லட்சத்தை அரசு ஒப்பளித்துள்ளது.

- காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டிடத்திற்கு Local Area Network வசதிக்காக ரூ.2.68 இலட்சத்திற்கு அரசு நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது.

**16. நீதித்துறை முத்திரைத்தாள் மின்னணுமயமாக்கல்**

நீதிசார்ந்த மின்னணு முத்திரைக் கட்டண முறையானது முதற்கட்டமாக சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் அதன் மதுரைக் கிளையிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது. இது அனைத்து மாவட்ட மற்றும் சார்நிலை

நீதிமன்றங்களிலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. நீதிசார்ந்த மின்னணு முத்திரைக் கட்டண முறையினை பொதுமக்கள் தாங்களாகவே இணையம் மூலம் உருவாக்கி பயன்படுத்தலாம் அல்லது இதற்கென அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் மூலமாகவோ அல்லது வங்கிகள் மூலமாகவோ விண்ணப்பம் தாக்கல் செய்து பெறலாம். மேலும், நீதிசாரா மின்னணு முத்திரைக் கட்டண முறையினை அங்கீகரிக்கப்பட்ட சேகரிப்பு மையங்கள் மூலம் பொதுமக்களுக்கு விற்பனை செய்ய அரசு அனுமதி அளித்துள்ளது.

பாரத ஸ்டேட் வங்கியின் மின்னணு பரிவர்த்தனை வாயிலுடன். வழக்கு விவர தொகுப்புகளை இணைத்து நீதிமன்ற

கட்டணங்களை மின்னணு பரிவர்த்தனை மூலமாக செலுத்த வழிவகை செய்யும் நோக்குடன், சென்னை உயர்நீதிமன்றம் பாரத ஸ்டேட் வங்கியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.

சென்னை உயர்நீதிமன்றம், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை மற்றும் மாவட்ட நீதிமன்றங்கள் வாயிலாக 01.03.2023 வரை பெறப்பட்ட மின்னணு நீதிமன்ற கட்டண விவரம் பின்வருமாறு:-

- சென்னை உயர்நீதிமன்றம் – ரூ.110.41 கோடி
- மதுரைக் கிளை – ரூ.27.41 கோடி
- மாவட்ட நீதித்துறை – ரூ.45.42 கோடி

**17. செலவினங்களின் வகைப்பாடு**

சென்னை உயர்நீதிமன்ற முதன்மை ஆயம் மற்றும் மதுரை கிளை ஆகியவை குறித்த செலவினங்கள், "சாட்டிய செலவினம்" எனவும், சார்நிலை நீதிநிருவாகம் குறித்த செலவினங்கள் "அனுமதிக்கப்பட்ட செலவினம்" எனவும் வகைப்படுத்தப்பட்டு உள்ளன.

2023-2024-ஆம் ஆண்டின் வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில், ரூ.353.18 கோடி "சாட்டிய செலவினத்திற்கும்" (Charged), ரூ.1394.21 கோடி "அனுமதிக்கப்பட்ட செலவினத்திற்கும்" (Voted), அனுமதிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**18. தமிழ் வழியிலான சட்ட இதழ்**

வழக்குரைஞர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக 'தீர்ப்பு திரட்டு' என்ற பெயரில்

தமிழ் வழியிலான சட்ட இதழ், மாதமிருமுறை வெளியிடப்பட்டு வருகிறது.

## 19. நீதித்துறை பயிற்சிக் கழகம்

- நீதிபதிகள் குறிப்பாக மாவட்ட நீதிபதிகள், முதுநிலை உரிமையியல் நீதிபதிகள் மற்றும் உரிமையியல் நீதிபதிகள் மற்றும் நீதித்துறை பணியாளர்களுக்கு பயிற்சி அளிப்பதும், புதியதாக பணி நியமனம் செய்யப்படும் நீதிபதிகளின் பணித்திறனை வளர்த்துக் கொள்ள ஏதுவாக, அறிமுகப் பயிற்சி வழங்கப்படுவதும் இதன் முதன்மையான நோக்கமாகும்.

- **மூன்று நீதித்துறை பயிற்சிக் கழகங்களில் சென்னையில் ஒன்றும், மதுரை மற்றும் கோயம்புத்தூரில் தலா ஒரு மண்டல மையமும் அமைந்துள்ளன.**

- மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம், தேசிய நீதித்துறை பயிற்சிக் கழகம் மற்றும் தமிழ்நாடு மாநில நீதித்துறை பயிற்சிக் கழகம் ஆகியவை ஒன்றிணைந்து, "தற்கால நீதித்துறைகள் மற்றும் சட்டம் மற்றும் தொழில்நுட்பத்தின் மூலம் நீதியை வலுப்படுத்துதல்" என்கிற பொருண்மை குறித்து, தென் மண்டலம்-II மண்டல மாநாட்டை

2023-ஆம் ஆண்டில் பிப்ரவரி 25 மற்றும் 26 ஆகிய தேதிகளில் சென்னை தமிழ்நாடு மாநில நீதித்துறை பயிற்சிக் கழகத்தில் நடத்தியது.

- நீதித்துறை பயிற்சிக் கழகத்தின் பயன்பாட்டிற்காக ரூ.28.54 இலட்சம் செலவினத்தில் பேருந்து ஒன்றினை வாங்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

## 20. உயர்நீதிமன்ற நடவடிக்கைகளில் தமிழ்மொழியை பயன்படுத்துதல்

சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழ் மொழியை அலுவல் மொழியாக பயன்படுத்த

அனுமதிக்க வேண்டுமென்கிற நீண்டகால கோரிக்கை 11.10.2012 அன்று நடந்த உச்சநீதிமன்றத்தின் முழு நீதிமன்ற கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. தமிழக அரசு 04.07.2014 அன்று முன்னாள் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி அவர்களுக்கு உச்சநீதிமன்ற முந்தைய முடிவினை மறுபரிசீலனை செய்து தமிழக அரசின் கோரிக்கையினை ஏற்கவேண்டுமென வலியுறுத்தியது. முன்னாள் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி தனது 18..01.2016 நாளிட்ட கடிதத்தில் உச்சநீதிமன்றத்தின் முழு அமர்வு தீவிர ஆலோசனைக்குப்பின், தமிழக அரசின் கோரிக்கையினை ஏற்க மறுத்து உச்சநீதிமன்றத்தின் முந்தைய முடிவினை உறுதி செய்தது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு முன்னாள் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களுக்கு எழுதிய 12.05.2022 நாளிட்ட கடிதத்தில், சென்னை உயர்நீதிமன்றம் அதன் மதுரை கிளையில் தமிழ் மொழியினை அலுவல் மொழியாக, ஆங்கிலத்துடன் பயன்படுத்த அனுமதி அளிப்பதற்கான தக்க நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தியிருந்தார்.

அதற்கு மாண்புமிகு ஒன்றிய சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எழுதியுள்ள 30.06.2022 நாளிட்ட பதில் கடிதத்தில், அலுவல் மொழித் துறையின்

பரிந்துரையின் அடிப்படையில் ஒன்றிய அரசின் நீதி மற்றும் சட்டத்துறை அமைச்சர் தனது 25.01.2021 நாளிட்ட கடிதத்தில், தமிழ் மொழியை சென்னை உயர்நீதிமன்றத்தின் அலுவல் மொழியாக அறிவிப்பதற்கான கோரிக்கையை மறுபரிசீலனை செய்யுமாறு அப்போதைய உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி அவர்களுக்கு கோரிக்கை வைத்துள்ளதாகவும், அன்னாரின் முடிவினை இது குறித்து எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

எனினும், தமிழக அரசு இக்கோரிக்கையை தொடர்ந்து, நினைவூட்டி, ஒன்றிய அரசை வலியுறுத்தும்.

## 21. தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதி

தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதியின் மூலம் மரணமடையும் வழக்குரைஞர்களின் வாரிசுதாரர்கள் / நியமனதாரர்கள் ஆகியோருக்கு நிதியுதவி வழங்குவதற்கான தொகை ரூ.7 இலட்சத்திலிருந்து, ரூ.10 இலட்சத்திற்கு உயர்த்தி அரசு வழங்கி வருகிறது. மேலும், இந்நிதிக்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் மானியத்தை ரூ.8 கோடியிலிருந்து ரூ.10 கோடியாக உயர்த்தி, அரசு ஆணையிட்டுள்ளது.

2022-2023-ஆம் ஆண்டில், நிதி பற்றாக்குறையின் காரணமாக, உயிரிழந்த இறந்த வழக்குரைஞர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்க வேண்டிய நிதியுதவி நிலுவையில்

இருந்தது. இதனை முழுமையாக வழங்க ஏதுவாக, ரூ.5.72 கோடி நிதியினை தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி வழக்குரைஞர் குழுமத்தால் நிர்வாகிக்கப்படும் தமிழ்நாடு வழக்குரைஞர் நல நிதிக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

## 22. இளம் வழக்குரைஞர் உதவித் தொகை

புதியதாக பதிவு செய்யும் இளம் வழக்குரைஞர்களுக்கு, மாதம் தோறும் ரூ.3,000/- வீதம் இரண்டு ஆண்டுகளுக்கு குறிப்பிட்ட தகுதிகளின் அடிப்படையில் உதவித் தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டம், சட்டக் கல்வி இயக்குநர், சென்னை மூலமாக செயல்படுத்தப்படுகிறது.

2021-2022-ஆம் நிதியாண்டில், நபர் ஒன்றுக்கு ரூபாய் 3,000/- வீதம், 1000 இளம் வழக்குரைஞர்களுக்கு மாத உதவித் தொகை ரூ.30 இலட்சம் செலவில் வழங்கப்பட்டது.

2022-2023-ஆம் நிதியாண்டில், நபர் ஒன்றுக்கு ரூபாய் 3,000/- வீதம், 426 இளம் வழக்குரைஞர்களுக்கு, மாத உதவித் தொகை ரூ.12.78 இலட்சம் செலவில் வழங்கப்பட்டது.

## 23. தமிழ்நாடு வழக்குரைஞர்களின் எழுத்தர்கள் நல நிதி

தமிழ்நாடு வழக்குரைஞர்களின் எழுத்தர்கள் நல நிதியிலிருந்து, மரணமடையும் வழக்குரைஞர்களின் எழுத்தர்களின் நியமனதாரர்கள் மற்றும் வாரிசுகளுக்கு ரூ.4 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி வழக்குரைஞர் குழுமம் நிர்வகிக்கும் தமிழ்நாடு வழக்குரைஞர்களின் எழுத்தர்கள் நல நிதியின் நிதி ஆதாரங்களை பெருக்குவதற்காக வழக்குரைஞர்களின் எழுத்தர் கட்டண வில்லை ரூ.10/- ஆகவும், மற்றும் உறுப்பினர் சேர்க்கை மற்றும் பதிவுக் கட்டணம் ரூ.5,500/- ஆகவும் உயர்த்தி, அரசால் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

## 24. தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக்குழு

24.1. இம்மாநிலத்தில் தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக்குழுவினையும் மற்றும் மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக் குழுவினை மாவட்டந்தோறும் அரசு ஏற்படுத்தியுள்ளது.

மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு மாநிலம் முழுவதும் நீதிமன்றங்கள் அமைந்துள்ள இடங்களில் வட்ட சட்டப்பணிகள் குழுவினை அமைத்துள்ளது. தற்போது, மாநிலத்தில் 32 மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுக்கள், 150 வட்ட சட்டப்பணிகள் குழுக்கள் மற்றும் 2 உயர்நீதிமன்ற சட்டப்பணிகள் குழுக்கள் இயங்கி வருகின்றன.

24.2. சமுதாயத்தில் மிகவும் நலிவடைந்த பிரிவினருக்கு இலவசமாக சட்டம் சார்ந்த சேவைப் பணிகளை வழங்கவும், பொருளாதார அல்லது ஏனைய இயலாமைகள் காரணமாக எந்த ஒரு குடிமகனுக்கும் நீதி கிடைப்பதற்கான வாய்ப்புகள் மறுக்கப்படக் கூடாது என்பதை உறுதி செய்வதற்கும், தகராறுகளுக்குத்

தீர்வு காணும் ஒரு மாற்று அமைப்பாக மக்கள் நீதிமன்றங்களை சட்டப்பூர்வமாக ஏற்படுத்துவதற்கும், சமுதாயத்தில் ஏழை எளிய மக்களுக்கு அவர்களுடைய உரிமைகள் குறித்து பயிற்றுவிக்கவும், சமூக நலன் குறித்த பல்வேறு சட்டங்கள் மற்றும் நிருவாக ஆணைகளின்படி அவர்களுக்குரிய பயன்கள் மற்றும் சலுகைகளைப் பெற வழிவகை செய்யவும், 1987-ஆம் ஆண்டைய சட்டப்பணிகள் ஆணைக்குழு சட்டம் (1994-ஆம் ஆண்டின் 59-வது சட்டப்படி திருத்தியமைக்கப்பட்டது) இயற்றப்பட்டது.

உதவித்தொகை, பணியாளர் சம்பளம் மற்றும் 2018-ஆம் ஆண்டின் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு இழப்பீடு வழங்குதல்

ஆகியவற்றுக்காக 2022-2023-ஆம் ஆண்டில், மொத்தம் ரூ.31.33 கோடியை தமிழ்நாடு சட்டப்பணிகள் ஆணைக்குழுவிற்கு அரசு வழங்கியுள்ளது.

## 24.3. சட்ட உதவி பெற தகுதியுடையோர்

சட்டப்பணிகள் ஆணைக்குழு சட்டம், 1987-ன், பிரிவு 12-ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் அளவுகோல்களில் ஏதாவது ஒன்றையோ அல்லது அனைத்தையும் நிறைவு செய்யும் நபர்கள் வழக்கு தொடுக்கவும், எதிர்த்து வழக்காடவும் சட்ட உதவி பெறவும் தகுதியுடையவர்களாவர்:-

(i) ஆதிதிராவிடர் (அல்லது) பழங்குடியினர்

(ii) அரசியலமைப்பு சட்டப் பிரிவு 23-ல் குறிப்பிடப்பட்டு உள்ளவாறு மனிதர்களை விற்பது மற்றும் வாங்குவது (அல்லது) வற்புறுத்தி வேலை வாங்குவது ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட நபர்

(iii) பெண் (அல்லது) குழந்தை

(iv) மாற்றுத் திறனாளிகள்

(v) பேரிடர்கள், இன வன்முறை, சாதி வன்கொடுமை, வெள்ளம், பஞ்சம், நில அதிர்ச்சி, தொழிற்சாலை பேரழிவு ஆகியவற்றால் பாதிப்பிற்கு உள்ளானவர்கள்

(vi) தொழிற்சாலை தொழிலாளர்கள்

(vii) சிறைக் காவலில் இருப்போர், பாதுகாப்பு இல்லம், இளம் குற்றவாளிகள் இல்லம், மன நல மருத்துவமனை அல்லது மனநல காப்பகம் இவைகளில் காவலில் உள்ளவர்கள்

(viii) சட்டப்பணிகள் ஆணைக்குழு சட்டம், 1987-ன், பிரிவு 12(எச்)-ல் குறிப்பிட்டுள்ள வருடாந்திர வருமானத்திற்கு குறைவாக உள்ளவர்கள். இலவச சட்ட உதவி பெறுவோருக்கான ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ.3,00,000/- ஆகும்.

### 24.4. **சட்ட உதவி வழக்குரைஞர் திட்டம்**

காவலில் உள்ளவர்கள் பிணையில் வெளிவருவதற்கும், மீண்டும் காவலில் வைப்பதற்கான ஆணையை எதிர்ப்பதற்கும், காவலில் உள்ளவர்கள் வழக்கை எதிர்கொள்வதற்கும் மற்றும் பாதகமான உத்தரவுகளை எதிர்த்து மேல் முறையீடு மற்றும் மறு ஆய்வு செய்வதற்கும், தேவையான சட்ட உதவிகளை அளிப்பதற்கும் இத்திட்டம் உதவுகிறது. மேலும், குற்றவியல் நீதிமன்ற நடுவரின் முன்பாக காவலில் வைப்பதற்காக அழைத்து வரப்படும் நபர்கள் வழக்குரைஞர்கள் வைத்துக் கொள்ள வசதியற்றவர்களாக இருப்பின், அவர்களுக்கு சட்ட உதவி அளிப்பதற்கு, சட்ட உதவி வழக்குரைஞர்கள் உதவிபுரிகின்றனர்.

சட்ட உதவிகள் வழக்குரைஞர் திட்டத்தின் செயல்திறன் (Performance) கீழே விவரிக்கப்பட்டுள்ளது:-

| நீதிமன்ற காவலில் இருந்த சிறை கைதிகளுக்கு சட்ட உதவிகள் வழங்கப்பட்ட எண்ணிக்கை | நீதிமன்ற காவலில் இருந்த சிறை கைதிகளிடமிருந்து பெறப்பட்ட பிணை விண்ணப்பங்களின் எண்ணிக்கை | பிணை வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 3551 | 2511 | 1640 |

## 24.5. மாற்றுத் தீர்வு மையங்கள்

மாநிலத்தில் 31 மாற்றுத் தீர்வு மையங்கள் செயல்பட்டு வருகின்றன, அவை சமரச நடவடிக்கைகள், மக்கள் நீதிமன்றங்கள் மற்றும் பிற மாற்று முறை தீர்வுகளுக்கு இணைப்பு பாலமாக செயல்படுகின்றன.

## 24.6. ஆலோசனை மற்றும் சமரச மையம்

பிரச்சனைகளை அடிப்படையிலேயே தீர்த்து வைக்கும் ஒரு மாற்று முறை தீர்வு அமைப்பாக வழக்குகளை நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லாமலே, உடன்பாடு எட்டுவதற்கு உதவும் ஒரு கருவியாக ஆலோசனை மற்றும் சமரச மையங்கள் இயங்கி வருகின்றன.

2022-ஆம் ஆண்டில், 170 வழக்குகள் ஆலோசனை மையத்தால் முடித்து வைக்கப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு:-

| ஆலோசனை மையங்களின் எண்ணிக்கை | முடித்து வைக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|
| 184 | 170 |

2022-ஆம் ஆண்டில், 2,440 வழக்குகள் சமரச மையத்தால் முடித்துவைக்கப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு:-

| சமரச மையங்களின் எண்ணிக்கை | முடித்து வைக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|
| 38 | 2440 |

**24.7. சட்டம் சார்ந்த உதவிகள்**

சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள ஏழை எளிய மக்கள், அரசு வழங்கும் நலத்திட்ட உதவிகளை பெறுவதற்கு, சட்டப்பணிகள் ஆணைக் குழுக்கள் இலவசமாக சட்ட உதவிகள் அளித்து வருகின்றன. மேலும், குற்ற வழக்கில் பாதிக்கப்பட்டவர்கள் சட்ட உதவிகள் பெறுவதற்கும், மோட்டார் வாகன விபத்துகளில்

பாதிக்கப்பட்டவர்கள் உரிய இழப்பீடு பெறுவதற்கும் உதவுகின்றன.

### 24.8. மக்கள் நீதிமன்றம் (Lok Adalat)

மக்கள் நீதிமன்றங்கள், நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்கையோ அல்லது நீதிமன்ற அதிகார வரம்புக்குள் வருகின்ற எந்த பொருள் பற்றியோ, அதில் சம்மந்தப்பட்ட தரப்பினர்களுக்கிடையே ஒரு தீர்வு எட்டுவதற்கு நடத்தப்பட்டு வருகின்றன. நிரந்தர மக்கள் நீதிமன்றங்கள் சட்டப்பணி ஆணைக்குழு சட்டம், 1987-ன், பிரிவு 22பி-ன்படி, 32 மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. உச்சநீதிமன்றம் முதல் வட்ட அளவிலான நீதிமன்றம் வரை அனைத்து நீதிமன்றங்களிலும் தேசிய மக்கள்

நீதிமன்றங்கள் நடைபெற்று வருகின்றன. வழக்கமாக நடத்தப்படும் மக்கள் நீதிமன்றத்துடன் மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு தேசிய மக்கள் நீதிமன்றத்தையும் நடத்தி வருகிறது.

2021-2022 மற்றும் 2022-2023-ஆம் நிதியாண்டுகளில் ரூ.5235.83 கோடி தீர்வுத் தொகைக்கான மொத்தம் 7,41,407 வழக்குகள் முடித்து வைக்கப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு:-

| நிதியாண்டு | முடித்து வைக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | தீர்வுத் தொகை |
|---|---|---|
| 2021-2022 | 3,12,379 | 2370,33,90,219 |
| 2022-2023 | 4,29,028 | 2865,48,89,395 |

## 24.9. சிறைத்துறையில் மக்கள் நீதிமன்றம்

சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, வேலூர், கடலூர், சேலம், திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் மத்திய சிறைச்சாலைகளிலும் மற்றும் வேலூரில் உள்ள பெண்கள் தனிச்சிறைச்சாலையிலும் சட்ட உதவி மையம் மற்றும் மக்கள் சிறைச்சாலை நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. சென்னை புழலிலுள்ள மத்தியச் சிறைச்சாலையில் ஒரு சட்ட உதவி மையம் இயங்கி வருகிறது. சிறைச்சாலை நீதிமன்றம் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நடைபெறுகிறது.

சென்னை புழல் மத்தியச் சிறைச்சாலையில் சட்ட உதவி மையம் இயங்கி

வருகிறது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் மக்கள் நீதிமன்றம் நடைபெறுகிறது. சிறைவாசிகளிடமிருந்து மனுக்கள் பெறப்பட்டு அவை சட்ட உதவி மையங்களில் உள்ள உரிய பதிவேடுகளில் பதியப்பட்டு, அவற்றின்மீது மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. சிறைத்துறையில் இயங்கும் மக்கள் நீதிமன்றத்தின் செயல்திறன் பின்வருமாறு:-

| காலம் | அமைக்கப்பட்ட அமர்வுகளின் எண்ணிக்கை | பரிந்துரைக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | முடிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| ஜனவரி, 2022 முதல் டிசம்பர் 2022 (19.10.2022-ஆம் நாள் உட்பட) | 96 | 828 | 405 |

மாநிலம் முழுவதும் 19.10.2022 அன்று விசாரணை சிறைக்கைதிக்காக (Under-trial

Prisoners) தமிழ்நாடு மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் ஆணைப்படி, மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவும், வட்ட சட்டப் பணிகள் குழுவும், சிறைத்துறையில் மக்கள் நீதிமன்ற சேவையினை வழங்கி, சிறு குற்ற வழக்குகளை முடித்து வைத்தது. அதன் விவரம் பின்வருமாறு:-

| அமைக்கப்-பட்ட அமர்வுகளின் எண்ணிக்கை | பரிந்துரைக்கப்-பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | முடித்து வைக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | விசாரணை நாள் அன்றே விடுவிக்கப்-பட்டவர்கள் | |
|---|---|---|---|---|
| | | | ஆண் | பெண் |
| 87 | 727 | 353 | 232 | 8 |

### 24.10. நடமாடும் ஊர்தி'

சட்டப்பணிகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட சட்ட உதவித் திட்டங்கள் மற்றும் செயல்முறைத் திட்டங்களை

விளம்பரப்படுத்த மாநிலத்தின் விளம்பர இயக்கத்தின் ஒரு பகுதியாகவும், நடமாடும் நீதிமன்றம் நடத்திடவும், சட்ட விழிப்புணர்வு முகாம்கள் நடத்திடவும் மற்றும் எல்.சி.டி திரைப்படக்கருவி மூலம் விளம்பரப் படங்களை திரையிடவும் "நடமாடும் ஊர்தி" பயன்படுத்தப்படுகிறது,

### 24.11. கிராம சட்ட விழிப்பு மற்றும் ஆதரவு மையங்கள்

தேசிய சட்டப்பணிகள் ஆணைக் குழுவின் வழிகாட்டுதலின்படி, மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக் குழுவின் உதவியுடன், இருப்பிடம் மற்றும் சமூகம் சார்ந்த தடைகளை எதிர்கொள்ளும் மக்களுக்கு, சட்டச் சேவை நிறுவனங்களை அணுகுவதற்காக, அனைத்து

கிராமங்களிலோ அல்லது பல கிராமங்கள் அடங்கிய தொகுப்பிலோ “கிராம சட்ட விழிப்பு மற்றும் ஆதரவு மையங்கள்” நிறுவப்பட்டுள்ளன.

இவை பரிந்துரை செய்யப்பட்ட வழக்குரைஞர் அல்லது தன்னார்வ சட்ட தொண்டர்கள் ஆகியோரை கொண்டு இயங்கிவருகிறது. ஆதரவு மையங்களை நாடும் மக்களுக்கு, ஆலோசனை மற்றும் அறிவுரைகளை வழங்குகின்றனர். மேலும் சட்ட உதவி தேவைப்படின் அருகிலுள்ள சட்ட உதவி மையங்களை அணுகுமாறு அறிவுரை வழங்குகின்றனர்.

### 24.12. தொலைபேசி வழி சட்ட உதவி

சென்னையிலுள்ள தமிழ்நாடு மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் சட்ட உதவி

மையக் கட்டடத்தில், சட்ட உதவி மையம் ஒன்று தொலைபேசி வழி சட்ட உதவி அளிக்கும் பொருட்டு இயங்கி வருகின்றது. இம்மையத்திற்கு, சுழற்சி முறையில் காலை மற்றும் மாலை இருவேளையும், அனைத்து வேலை நாட்களிலும் நியமிக்கப்பட்ட வழக்குரைஞர்கள், பொதுமக்களின் சட்டம் சார்ந்த பிரச்சனைகளுக்கு தொலைபேசி வாயிலாக தக்க ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகள் வழங்குகின்றனர். சட்ட உதவி கோரும் பொதுமக்கள் 044-25342441 என்ற தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம். வழக்காடும் பொது மக்கள் தொடர்பு கொள்ள ஏதுவாக இலவச உதவி எண் 1800-4252-441 பயன்பாட்டில் உள்ளது. தொலைபேசி வழி சட்ட

உதவி மையத்தில் பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட அழைப்பு குறித்த விவரங்கள் பின்வருமாறு:-

| தொலைபேசி வழி சட்ட உதவியின் எண் | பெறப்பட்ட அழைப்பில் வழங்கப்பட்ட சட்ட ஆலோனையின் எண்ணிக்கை |
|---|---|
| 044-25342441 | 746 |
| 9445033363 | 1,263 |
| 1800-4252-441<br>மற்றும் 15100 | 137 |

## 25. அரசு வழக்காடும் துறை, உயர்நீதிமன்றம், சென்னை

மாநில தலைமை அரசு வழக்குரைஞரின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் அரசு வழக்காடல்

துறை இயங்கி வருகிறது. 14 அலுவலகங்கள் அவரது கட்டுப்பாட்டில் உள்ளன. சென்னை உயர்நீதிமன்றத்தில் அரசு சார்பாக வாதிடுவதற்காக, கூடுதல் தலைமை அரசு வழக்குரைஞர் அலுவலகங்கள் I, II, IV, V, VII, VIII & IX, மாநில குற்றவியல் வழக்குரைஞர் அலுவலகம், மாநில உரிமையியல் வழக்குரைஞர் அலுவலகங்கள் செயல்படுகின்றன. சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில், அரசு சார்பாக வாதிடுவதற்காக, கூடுதல் தலைமை அரசு வழக்குரைஞர் அலுவலகங்கள் III, VI, உரிமையியல் வழக்குரைஞர் அலுவலகம் மற்றும் கூடுதல் குற்றவியல் வழக்குரைஞர் அலுவலகங்கள் செயல்படுகின்றன. புதுதில்லியில் உள்ள உச்ச நீதிமன்றத்தில்

மாநில அரசு சார்பாக வாதிடுவதற்காக இரண்டு கூடுதல் தலைமை அரசு வழக்குரைஞர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## 26. குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககம்

26.1. குற்றவியல் நீதி அமைப்பின் நிர்வாகத்தில், குற்ற வழக்கு தொடர்வுத்துறை இன்றியமையாத பங்கினை வகிக்கிறது. இத்துறையின் முதன்மை நோக்கம் குற்ற வழக்குகளை நடத்துவது மட்டுமன்றி, குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத்தருவதும் மற்றும் நீதிமன்றங்களில் குற்ற வழக்குகளை குறைப்பதுவும் ஆகும். இத்துறையானது மாநிலத்தில் உள்ள தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள், போக்சோ

வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள், பாராளுமன்ற/சட்டமன்ற உறுப்பினர்களின் மீதான வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள், மாவட்ட உரிமையில் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களில் குற்ற வழக்குகள் முறையாக நடத்தப்படுவதை உறுதி செய்கிறது.

26.2. குற்ற வழக்கு தொடர்வு இயக்ககம் உள்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது. இத்துறைக்கு ஒரு முதுநிலை குற்ற வழக்கு தொடர்வு அலுவலர், குற்ற வழக்கு தொடர்வு இயக்குநராக தலைமை வகிக்கிறார். இணை இயக்குநர் (நிர்வாகம்) மற்றும் இதழ் ஆசிரியர் (வெளியீடுகள்) ஆகியோர்

தலைமையகத்தில் நிர்வாக பணிகளில் குற்ற வழக்கு தொடர்வு இயக்குநர் அவர்களுக்கு உறுதுணையாக பணிபுரிந்து வருகின்றனர். மண்டல அளவில் சென்னை, காஞ்சிபுரம், கடலூர், கோயம்புத்தூர், சேலம், மதுரை, திருச்சி, திருநெல்வேலி, சிவகங்கை, தஞ்சாவூர் மற்றும் வேலூர் ஆகிய 11 இடங்களில் குற்ற வழக்கு தொடர்வு துணை இயக்குநர்களும், மாவட்ட அளவில் ஆலந்தூர், திருவண்ணாமலை, திண்டுக்கல், ஈரோடு, கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம், நாகர்கோவில், நாமக்கல், பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், நீலகிரி, திருவள்ளூர், தூத்துக்குடி, விழுப்புரம் மற்றும் விருதுநகர் ஆகிய 16 இடங்களில் குற்ற வழக்கு தொடர்வு உதவி இயக்குநர்களும்

நிர்வாக பொறுப்பு வகித்து வருகின்றனர். இவ்விவரம் அட்டவணை-V-ல் இணைக்கப்பட்டு உள்ளது.

26.3. குற்ற வழக்கு தொடர்வு இயக்குநர், குற்ற வழக்கு தொடர்வுத்துறையின் ஒட்டுமொத்த நிர்வாக தலைவர் ஆவார். இயக்குநரின் பணியானது குற்ற வழக்கு நடத்துநர்களுக்கும் புலனாய்வு அலுவலர்களுக்கும் இடையே திறம்பட்ட ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதும், குற்ற வழக்கு தொடர்வு துணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர்களால் வழங்கப்படும் சட்ட கருத்துரைகள் மற்றும் சட்ட அலுவலர்களின் பணிகள் குறித்த புள்ளி விவரங்களை

கண்காணிப்பதும், அது தொடர்பான ஆய்வுக்கூட்டங்களை நடத்துவதும், மற்றும் கூடுதல் அரசு வழக்கு நடத்துநர், சிறப்பு வழக்கு நடத்துநர்களின் நீதிமன்ற பணிகள் குறித்து ஆய்வுக்கூட்டங்களை நடத்தி அதன் விவரங்களை அரசுக்கு தெரியப்படுத்துதல் ஆகும்.

26.4. இணை இயக்குநர் (நிர்வாகம்) அவர்களின் பணியானது குற்ற வழக்கு தொடர்வு இயக்குநர் அவர்களின் நிர்வாகத்தின் கீழ் பணியாற்றுவதும், இயக்குநரின் அறிவுரைகளை சார்நிலை அலுவலர்கள் முறையாக பின்பற்றுகிறார்களா என்பதை உறுதி செய்வதும், குற்ற வழக்கு நடத்துநர்களின் நீதிமன்ற

பணிகளை திடீர் ஆய்வு செய்து, அவர்தம் பணிகளை கண்காணிப்பதும், இயக்குரால் அறிவுறுத்தப்படும் பொருள் தொடர்பாக ரகசிய விசாரணைகள் மேற்கொள்வதும், கண்காணிப்புக்குழு (Vigilance Committee), தள்ளுபடியான வழக்குகள் குறித்து ஆய்வு செய்யும் குழு (Contents Committee), விசாகா குழு ஆகிய குழுக்களுக்கு தலைவராக இருந்து வருகிறார்.

26.5. இதழ் ஆசிரியர் (வெளியீடுகள்) அவர்களின் பணியானது, குற்ற வழக்கு நடத்துநர்கள், சட்ட அறிவினை மேம்படுத்தி பயனடையும் வகையில், முக்கிய தீர்ப்புகள் மற்றும் சிறப்பு சட்டப்பிரிவுகளை உள்ளடக்கிய ‘தமிழ்நாடு

குற்ற வழக்கு நடத்துநர்களுக்கான இதழினை ஒவ்வொரு மாதமும் வெளியிடுவது தொடர்பான பணிகளை மேற்கொள்வதாகும்.

26.6. குற்ற வழக்கு தொடர்வு துணை இயக்குநரின் பணியானது மண்டல அளவிலான நிர்வாக தலைவராகவும், அவர்களின் நிர்வாக கட்டுப்பாட்டிற்குள் பணியாற்றி வரும் குற்ற வழக்கு தொடர்வு உதவி இயக்குநர் அலுவலகங்கள், கூடுதல் அரசு வழக்கு நடத்துநர், அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 மற்றும் நிலை-2 ஆகியோர் தம் பணிகளை திடீர் ஆய்வு மேற்கொள்வதும், மாதிரி குற்றப்பத்திரிக்கைகள் மற்றும் சட்டக்கருத்துரைகள் வழங்குவதும், மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரின்

வேண்டுதலின்பேரில் முக்கிய குற்ற வழக்குகளுக்கு சட்டக்கருத்துரு வழங்குவதும் நீதிமன்ற மற்றும் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளருக்கு ஒருங்கிணைப்-பாளராகவும் செயல்பட்டு வருகிறார்.

26.7. குற்ற வழக்கு தொடர்வு உதவி இயக்குநரின் பணியானது மண்டல அளவிலான நிர்வாக தலைவராகவும், அவர்களின் நிர்வாக கட்டுப்பாட்டிற்குள் பணியாற்றி வரும் அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 மற்றும் நிலை-2 ஆகியோரின் பணிகளை திடீர் ஆய்வு மேற்கொள்வதும், மாதிரி குற்றப்பத்திரிக்கைகள் மற்றும் சட்டக்கருத்துரைகள் வழங்குவதும், மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரின்

வேண்டுதலின்பேரில் முக்கிய குற்ற வழக்குகளுக்கு சட்டக்கருத்துரு வழங்குவதும், நீதிமன்ற மற்றும் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளருக்கு ஒருங்கிணைப்-பாளராகவும் செயல்பட்டு வருகிறார்.

26.8. மேலும், மாநிலம் முழுவதும் உள்ள 31 முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களில் 31 கூடுதல் குற்றவியல் வழக்குரைஞர்கள் குற்றவியல் வழக்குகளை நடத்துகின்றனர்.

26.9. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் தரத்தில் 3 சிறப்பு வழக்கு நடத்துநர்கள் சட்ட மன்ற / பாராளுமன்ற உறுப்பினர்களின் மீதான வழக்குகளை நடத்தும் 3 சிறப்பு நீதிமன்றங்களில் குற்ற வழக்குகளை நடத்தி வருகின்றனர்.

26.10. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் தரத்தில் 16 சிறப்பு வழக்கு நடத்துநர்கள் 16 போக்சோ சிறப்பு நீதிமன்றங்களில் குற்ற வழக்குகளை நடத்தி வருகின்றனர்.

26.11. 97 நிலை 1 அரசு உதவி வழக்கு நடத்துநர்கள் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களிலும், வணிக குற்ற புலனாய்வு பிரிவு மற்றும்பொருளாதார குற்ற பிரிவுக்கான சிறப்பு நீதிமன்றங்களிலும் குற்ற வழக்குகளை நடத்தி வருகின்றனர்.

26.12. குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் மற்றும் பெருநகரங்களில் பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களில் அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை 2 தரத்தில் 203 சட்ட

அலுவலர்கள் வழக்குகளை நடத்தி வருகின்றனர்.

26.13. இது தவிர, குற்ற வழக்கு தொடர்வுத்துறையை சேர்ந்த அரசு வழக்கு நடத்துநர்கள் மாற்றுப் பணியில் பல்வேறு துறைகளில் பணிபுரிந்து வருகின்றனர். துணை இயக்குநர் தரத்திலான 4 கூடுதல் சட்ட ஆலோசகர்கள் சட்ட பிரச்சனைகளை தீர்ப்பதற்காக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையின் இயக்குநரகத்திலும், சென்னையின் தெற்கு, கிழக்கு மற்றும் வடக்கு மண்டலங்களிலும் பணி புரிந்து வருகின்றனர். துணை இயக்குநர் தரத்திலான ஒரு மூத்த சட்ட ஆலோசகர், சட்ட சிக்கல்களில் உதவி புரிய

சென்னையில் உள்ள குற்றப்புலனாய்வு பிரிவில் பணிபுரிந்து வருகின்றார். கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் தரத்திலான 34 துணை சட்ட ஆலோசகர்கள் ஊழல் தடுப்பு வழக்குகளை ஊழல் தடுப்பு சிறப்பு நீதிமன்றங்களில் நடத்தி வருகின்றனர். கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் தரத்திலான சட்ட ஆலோசகர் ஒருவர் சென்னையில் உள்ள தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையத்திலும், மேலும் ஒரு சட்ட ஆலோசகர் சென்னையில் உள்ள வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மையின்ஆணையகத்தில் பணிபுரிந்து வருகின்றனர்.

26.14. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, காவல் துறை, சிறைத்துறை, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை, உணவு பாதுகாப்பு மேல் முறையீட்டு தீர்ப்பாயம், விதைச்சான்று ஆணையரகம் ஆகியவற்றில் நிலை 1 தரத்தில் 25 அரசு உதவி வழக்கு நடத்துநர்கள் மறுபணியில் பணிபுரிந்து வருகின்றனர்.

26.15. காவல் துறை, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை, தமிழ் நாடு சீருடை பணியாளர் தேர்வாணையம், உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகம், உணவு பகுப்பாய்வு கூடங்கள், தமிழ்நாடு காவல் கூடம் ஆகியவற்றில் நிலை 2 தரத்தில் 13 அரசு உதவி

வழக்கு நடத்துநர்கள் சட்ட ஆலோசகர்களாக பணிபுரிந்து வருகின்றனர்.

26.16. மேலும், ஒரு இயக்குநரின் நேர்முக உதவியாளரும், இரண்டு கண்காணிப்பாளர்களும், ஒரு சுருக்கெழுத்து தட்டச்சர் (நிலை-1)-ம், ஒரு சுருக்கெழுத்து தட்டச்சர் (நிலை-2)-ம், ஐந்து உதவியாளர்களும், ஒரு சுருக்கெழுத்து தட்டச்சர் (நிலை-3)-ம், மூன்று இளநிலை உதவியாளர்களும், இரண்டு தட்டச்சர்களும், ஒரு பதிவுரு எழுத்தரும், ஒரு ஓட்டுநரும் இவ்வியக்ககத்தில் பணிபுரிந்து வருகின்றனர்.

26.17. 31.03.2023 அன்று இவ்வியக்ககத்தின் மொத்த பணியிடங்களின் (சட்ட அலுவலர்கள்

மற்றும் அமைச்சு பணியாளர்கள்) எண்ணிக்கை 804 ஆகும்.

## 27. சிறப்புக் குற்றவியல் / உரிமையியல் வழக்குரைஞர்கள் நியமனம்

பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்புச்) சட்டம், 1989 (மத்தியச் சட்டம் 33/1989), தமிழ்நாடு முதலீட்டார்களின் நலன்களைப் பாதுகாத்தல் (நிதி நிறுவனங்களில்) சட்டம், 1997, அத்தியாவசிய பொருட்கள் சட்டம், 1955 மற்றும் போதை மருந்துகள் மற்றும் மன மயக்கம் சார்ந்த பொருட்கள் சட்டம், 1985, மனித உரிமைகள் சட்டம், 1993, சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) சட்டம், 1957, வெடிகுண்டு வெடிப்பு வழக்குகள் மற்றும் பொடா

சட்டம், 2022, பயங்கரவாத மற்றும் சீர்குலைக்கும் நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டம், 1987 ஆகிய சட்டப்பிரிவுகளின் கீழ் பதியப்படும் வழக்குகளில் அரசு சார்பாக வாதாடுவதற்கு மாவட்ட சார்நிலை நீதிமன்றங்களில் காலமுறை அடிப்படையில், சிறப்பு குற்றவியல் வழக்கறிஞர்கள் தமிழக அரசால் நியமிக்கப்படுகின்றனர்.

மேலும், மகிளா நீதிமன்ற வழக்குகள், வனக் குற்ற வழக்குகள், நில அபகரிப்பு வழக்குகள் மற்றும் நில எடுப்பு வழக்குகள் உள்ளிட்ட வழக்குகளை விசாரிப்பதற்கென மாவட்டங்களில் அமைக்கப்பட்டு உள்ள நீதிமன்றங்களில் பதிவு செய்யப்படும் வழக்குகளில் அரசு சார்பாக வாதாடுவதற்கு அரசு சிறப்புக் குற்றவியல் வழக்கறிஞர்கள் காலமுறை

அடிப்படையில் (Tenure Basis) நியமனம் செய்யப்படுகிறார்கள்.

மேலும், சார்நிலை நீதிமன்றங்களில் பதிவு செய்யப்படும் ஒரு குறிப்பிட்ட வழக்கிலோ அல்லது வழக்குகளிலோ அரசு சார்பாக வாதாடுவதற்கு சிறப்புக் குற்றவியல் வழக்கறிஞர்கள் அரசால் நியமனம் செய்யப்படுகின்றனர்.

## 28. முடிவுரை

ஒரு பாரபட்சமற்ற மற்றும் சுதந்திரமான நீதித்துறை, நாட்டின் ஜனநாயக கூட்டாட்சி கட்டமைப்பின் அடித்தளமாகும். எனவே, நீதித்துறையின் சுதந்திரத்தைப் பேணுவதற்கும், வழக்கு தொடுத்துள்ள பொதுமக்களுக்கு

விரைவான நிவாரணம் மற்றும் தீர்வுகளை வழங்குவதற்கும், இந்த அரசு போதிய வசதிகள் மற்றும் சூழலை ஏற்படுத்தி கொடுக்கும். அனைவருக்கும் நீதி என்கிற இலக்கை அடைய, அரசு தொடர்ந்து வலியுறுத்தும். தற்போதைய அரசு, நீதித்துறையின் சுதந்திரத்தைப் பேணுவதன் மூலம் விரைவான, சமூக, பொருளாதார நீதியை அடைவதற்கு போதுமான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும்.

**எஸ்.ரகுபதி**
**சட்டத்துறை அமைச்சர்**

## பிற்சேர்க்கை - I

## தமிழ்நாடு நீதித்துறையின் படிநிலை அமைப்பு

**முதன்மை இருப்பிட உயர்நீதிமன்றம், சென்னை மற்றும் மதுரையிலுள்ள சென்னை உயர்நீதிமன்றக் கிளை**

| *உரிமையியல் நீதிமன்றங்கள்* | | | *குற்றவியல் நீதிமன்றங்கள்* | |
|---|---|---|---|---|
| **சென்னை மாநகர்** | **வெளியூர்** | | **சென்னை மாநகர்** | **வெளியூர்** |
| முதன்மை நீதிபதி, மாநகர உரிமையியல் நீதிமன்றம் | மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றங்கள் | | முதன்மை நீதிபதி (அமர்வு நீதிமன்றம்) | மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றங்கள் |
| | சார்பு நீதிமன்றங்கள் | | தலைமை பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் |
| உதவி நீதிபதி, மாநகர உரிமையியல் நீதிமன்றம் | மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் | | பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | |
| சிறுவழக்குகள் நீதிமன்றங்கள் | மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள் | | | குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் |

## பிற்சேர்க்கை - II

### சென்னை மாநகரில் செயல்பட்டு வரும் நீதிமன்றங்கள் / தீர்ப்பாயங்களின் எண்ணிக்கை பற்றிய விவரம்

| வ. எண் | நீதிமன்றங்களின் / தீர்ப்பாயங்களின் பெயர் | மாவட்ட நீதிபதி | | முதுநிலை உரிமையியல் நீதிபதி | | உரிமையியல் நீதிபதி / குற்றவியல் நடுவர் |
|---|---|---|---|---|---|---|
| | | மாவட்ட நீதிமன்றங்கள் | மத்திய குற்ற புலனாய்வு வழக்கு தனி நீதிமன்றங்கள் | பெருநகர் குற்றவியல் நடுவர் | இதர வகை பிரிவு | |
| 1. | மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள் | 18 | 6 | -- | 28 | 1 |
| 2. | சிறு வழக்குகள் நீதிமன்றங்கள் | 1 | -- | -- | 8 | 8 |
| 3. | பெருநகர மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் | 2 | -- | 1 | 26@ | 8* |
| 4. | தொழிலாளர் நல நீதிமன்றங்கள் | 4 | -- | -- | -- | -- |
| 5. | தொழில் தீர்ப்பாயம் | 1 | -- | -- | -- | -- |
| 6. | விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம் | 1 | -- | -- | 1 | -- |
| 7. | அரசுப் போக்குவரத்து மேல்முறையீட்டு தீர்ப்பாயம் | 1 | -- | -- | -- | -- |
| 8. | இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் கீழ் வரும் தனி நீதிமன்றம் | 1 | -- | -- | -- | -- |
| 9. | தலைமை சொத்தாட்சியர் மற்றும் பொறுப்பு சொத்தாட்சியர் | 1 | -- | -- | -- | -- |
| 10. | துணை சொத்தாட்சியர் மற்றும் பொறுப்பு சொத்தாட்சியர் | -- | -- | -- | -- | 1 |
| 11. | குடும்ப நல நீதிமன்றங்கள் | 8 | -- | -- | -- | -- |
| 12. | மகளிர் நீதிமன்றம் | 1 | -- | -- | -- | -- |
| 13. | தமிழ்நாடு முதலீட்டாளர்கள் (நிதி நிறுவனங்களில்) பாதுகாப்புச் சட்டம் தனிநீதிமன்றம் | 1 | -- | -- | -- | -- |
| 14. | போதைமருந்துகள் மற்றும் மனமயக்கப்பொருட்கள் தடுப்புச்சட்டம் தனிநீதிமன்றங்கள் | 2 | -- | -- | -- | -- |
| 15. | குண்டு வெடிப்பு வழக்குகளை விசாரிப்பதற்கான அமர்வு நீதிமன்றம் | 1 | -- | -- | -- | -- |
| 16. | சென்னை மாநகராட்சி, சென்னை விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம் | 1 | -- | -- | -- | -- |
| 17. | உறுப்பினர் செயலர், சட்டப்பணிகள் ஆணைக்குழு, சென்னை | 1 | -- | -- | -- | -- |
| 18. | துணைச் செயலர், தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணையக்குழு | -- | -- | -- | 1 | -- |
| 19. | செயலாளர், மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, சென்னை | -- | -- | -- | 1 | -- |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 20. | ஊழல் வழக்குகளை விசாரிப்பதற்கென சிறப்பு நீதிமன்றம் | -- | -- | -- | 5** | -- |
| 21. | மோட்டர் வாகன விபத்து இழப்பீடு வழக்குகள் - சிறப்பு நீதிமன்றங்கள் -/ பொருளாதர குற்றங்களுக்கான சிறப்பு நீதிமன்றங்கள் | 2 | -- | -- | 2 | -- |
| 22. | நிரந்தர மக்கள் நீதிமன்றம் | 1 | - | - | -- | -- |
| 23. | தலைவர், தமிழ்நாடு வக்ஃப் தீர்ப்பாயம் | 1 | - | - | -- | -- |
| 24. | அமர்வு நீதிபதி, தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதான குற்றவியல் வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் | 2 | - | - | 1 | -- |
| 25. | பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் (POCSO)-ன் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் | 1 | -- | -- | -- | -- |
| 26. | வணிக நீதிமன்றங்கள் | 1 | -- | -- | -- | -- |
| | மொத்தம் | 53 | 6 | 1 | 73 | 18 |

**மொத்த நீதிமன்றங்களின் எண்ணிக்கை -151 [மாவட்ட நீதிபதிகள் - 59] [முதுநிலை உரிமையியல் நீதிபதிகள் - 74] [உரிமையியல் நீதிபதிகள் - 18]**

**@ 2 நடமாடும் நீதிமன்றங்கள் உட்பட**

*** குற்றவியல் நடுவர் தரத்தில் 5 விரைவு நீதிமன்றங்கள், 2 நில அபகரிப்பு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள் மற்றும் ஒரு கூடுதல் மகளிர் நீதிமன்றம் உட்பட**

**** கள்ள நோட்டு வழக்கு / பரிசு சீட்டு மற்றும் பண சுழற்சி / மத்திய குற்றப் பிரிவு / மத்திய குற்றப் பிரிவு மற்றும் குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வு துறை ஆகியவற்றுக்கான சிறப்பு நீதிமன்றம்**

# பிற்சேர்க்கை –III

## மாநிலத்தில் செயல்படும் சார்நிலை நீதிமன்றங்கள் மற்றும் தீர்ப்பாயங்களின் எண்ணிக்கை பற்றிய விவரம்

| | | மாவட்ட நீதிபதி | | | | | | | | | | | | முதுநிலை உரிமையியல் நீதிபதி | | | | | | | | உரிமையியல் நீதிபதி | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வரிசை எண் | மாவட்டங்கள் | மாவட்ட நீதிமன்றங்கள் | குடிமை உரிமை பாதுகாப்புச் சட்ட / எஸ்சி &எஸ்டி (வன்கொடுமைகள் தடுப்பு) சட்ட தனி நீதிமன்றங்கள் | குண்டு வெடிப்பு வழக்கு/ இனக்கலவர வழக்கு நீதிமன்றங்கள் | தொழிலாளர் நல நீதிமன்றங்கள் | தனி நீதிமன்றம் இன்றியமையாப் பொருட்கள் சட்டம்/ போதை மருந்துகள் மற்றும் மன மயக்கப் பொருட்கள் தடுப்புச் சட்டம் | தனி நீதிமன்றங்கள் மத்திய புலனாய்வுத்துறை வழக்கு / முதலீட்டாளர்கள் பாதுகாப்புச் சட்டம் வழக்கு | குடும்ப நல நீதிமன்றங்கள்/விரைவு நீதிமன்றங்கள் | மகளிர் நீதிமன்றங்கள் | தனி நீதிமன்றங்கள் மோட்டார் வாகன விபத்து இழப்பீடு | மக்கள் நீதிமன்றம் | தனி நீதிமன்றங்கள் POCSO Act | வணிக நீதிமன்றங்கள் / சுரங்கங்கள் மற்றும் கனிமங்களுக்கான சிறப்பு நீதிமன்றங்கள் | தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | சார்பு நீதிமன்றங்கள் | தனி நீதிமன்றம் மோட்டார் வாகன விபத்து இழப்பீடு | தனி நீதிமன்றங்கள் நில எடுப்பு வழக்குகள் | ஊழல் வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றங்கள் | மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு | மாநில போக்குவரத்து மேல்முறையீட்டு தீர்ப்பாயம் | வணிக நீதிமன்றங்கள் | மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் | குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | விரைவு நீதிமன்றங்கள் / கூடுதல் மகளிர் நீதிமன்றங்கள் | தனி நீதிமன்றங்கள் நில அபகரிப்பு வழக்குகள் | நடமாடும் நீதிமன்றங்கள் | மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) | (16) | (17) | (18) | (19) | (20) | (21) | (22) | (23) | (24) | (25) | (26) | (27) | (28) |
| 1. | அரியலூர் | 2 | -- | -- | -- | -- | -- | 1 | 1 | -- | 1 | -- | -- | 1 | 3 | -- | 2 | -- | 1 | -- | -- | 4 | 4 | 1 | -- | -- | 1 |
| 2. | கோயம்புத்தூர் | 5 | -- | 1 | 2 | 1* | 2## | 2 | 1 | -- | 1 | 1 | 1 | 1 | 7 | 1 | -- | 1 | 1 | 2 | 1 | 10 | 14 | 3# | 1 | 1 | 2 |
| 3. | கடலூர் | 4 | 1 | -- | 1 | -- | -- | 1 | 1 | -- | 1 | 1 | -- | 1 | 9 | 1 | 1 | -- | 1 | -- | -- | 10 | 10 | 1# | 1 | -- | 4 |
| 4. | தருமபுரி | 2 | -- | -- | -- | -- | -- | 1 | 1 | 1 | 1 | -- | -- | 1 | 5 | 1 | -- | -- | 1 | -- | -- | 4 | 5 | 2# | 1 | -- | 2 |
| 5. | திண்டுக்கல் | 2 | 1 | -- | -- | -- | -- | 2### | 1 | -- | 1 | -- | -- | 1 | 6 | 1 | -- | -- | 1 | -- | -- | 6 | 7 | 2# | -- | 1 | 4 |
| 6. | ஈரோடு | 5 | -- | -- | -- | -- | -- | 1 | 1 | 1 | 1 | -- | -- | 1 | 7 | 1 | -- | -- | 1 | 1 | -- | 8 | 9 | 3# | 1 | 1 | 1 |
| 7. | காஞ்சிபுரம் | 3 | -- | -- | 1 | -- | -- | 2### | 1 | -- | 1 | 1 | -- | 1 | 7 | -- | -- | -- | 1 | -- | -- | 8 | 12 | 3# | -- | 1 | 5 |
| 8. | கன்னியாகுமரி | 3 | -- | -- | -- | -- | -- | 2### | 1 | -- | 1 | 1 | -- | 1 | 7 | -- | -- | -- | 1 | -- | -- | 9 | 8 | 3# | -- | -- | 2 |
| 9. | கரூர் | 1 | -- | -- | -- | -- | -- | 1 | 1 | -- | 1 | -- | -- | 1 | 3 | -- | -- | -- | 1 | -- | -- | 4 | 4 | 2# | 1 | -- | 2 |
| 10. | கிருஷ்ணகிரி | 3 | -- | -- | 1 | -- | -- | 1 | 1 | 1 | 1 | -- | -- | 1 | 6 | 1 | -- | -- | 1 | -- | -- | 3 | 4 | 2# | 1 | -- | 3 |
| 11. | மதுரை | 6 | 1*# | 1** | 1 | 3* | 2## | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 2 | 8 | 1 | -- | 1 | 1 | 2 | -- | 7 | 11 | 3# | 1 | 1 | 2 |
| 12. | நாகப்பட்டினம் | 2 | -- | -- | -- | -- | -- | 1 | 1 | -- | 1 | 1 | -- | 1 | 4 | -- | -- | -- | 1 | -- | -- | 4 | 5 | 3# | -- | -- | 3 |

**பிற்சேர்க்கை-III-ன் தொடர்ச்சி**

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) | (16) | (17) | (18) | (19) | (20) | (21) | (22) | (23) | (24) | (25) | (26) | (27) | (28) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 13. | நாமக்கல் | 3 | 1 | -- | -- | -- | -- | 1 | 1 | -- | 1 | -- | -- | 1 | 5 | -- | -- | 1 | -- | -- | -- | 7 | 2# | 1 | 1 | -- | -- |
| 14. | நீலகிரி | 1 | -- | -- | 1 | -- | -- | 1 | 1 | -- | 1 | -- | -- | -- | 3 | -- | -- | -- | 1 | -- | -- | 3 | 3 | 2# | 1 | -- | 2 |
| 15. | பெரம்பலூர் | 1 | 1 | -- | -- | -- | -- | 1 | 1 | -- | 1 | -- | -- | 1 | 1 | -- | -- | -- | 1 | -- | -- | 2 | 2 | 1# | 1 | -- | 2 |
| 16. | புதுக்கோட்டை | 2 | 1 | -- | -- | 1* | -- | 1 | 1 | -- | 1 | -- | -- | 1 | 4 | -- | -- | -- | 1 | -- | -- | 3 | 4 | 1# | -- | -- | 4 |
| 17. | இராமநாதபுரம் | 2 | 1 | -- | -- | -- | -- | 2### | 1 | -- | 1 | -- | -- | 1 | 3 | -- | -- | -- | 1 | -- | -- | 4 | 5 | 1# | 1 | -- | 3 |
| 18. | சேலம் | 4 | -- | -- | 1 | 1* | -- | 2### | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 7 | 2 | -- | 1 | 1 | 1 | 1 | 10 | 13 | 3# | 1 | 1 | 3 |
| 19. | சிவகங்கை | 2 | 1 | -- | -- | -- | -- | 1 | 1 | -- | 1 | 1 | -- | 1 | 3 | -- | -- | 1 | 1 | -- | -- | 5 | 4 | 2# | -- | -- | 5 |
| 20. | தஞ்சாவூர் | 3 | 1*# | -- | 1 | 1* | -- | 2### | 1 | 1 | 1 | 1 | -- | 2$ | 5 | 1 | -- | -- | 1 | -- | -- | 6 | 7 | 3# | 1 | -- | 4 |
| 21. | தேனி | 2 | 1 | -- | -- | -- | -- | 2### | 1 | -- | 1 | -- | -- | 1 | 3 | -- | -- | -- | 1 | -- | -- | 5 | 5 | 3# | 1 | -- | -- |
| 22. | தூத்துக்குடி | 3 | 1 | -- | -- | -- | -- | 1 | 1 | -- | 1 | 1 | -- | 1 | 3 | -- | -- | -- | 1 | 1 | -- | 6 | 10 | 2 | 1 | -- | 2 |
| 23. | திருச்சி | 3 | 1*# | -- | 1 | -- | -- | 1 | 1 | 1 | 1 | -- | -- | 1 | 9 | 1 | -- | 1 | 1 | 1 | -- | 11 | 10 | 1# | 1 | 1 | 2 |
| 24. | திருநெல்வேலி | 4 | 1*# | -- | 1 | -- | -- | 2### | 1 | -- | 1 | 1 | -- | 1 | 8 | 1 | -- | 1 | 1 | 1 | -- | 14 | 12 | 1# | 1 | 1 | 4 |
| 25. | திருப்பூர் | 5 | -- | -- | -- | -- | -- | 1 | 1 | 1 | 1 | -- | -- | 1 | 8 | -- | -- | -- | 1 | 1 | -- | 7 | 10 | 2# | 1 | -- | 2 |
| 26. | திருவள்ளூர் | 5 | -- | -- | -- | -- | -- | 1 | 1 | 1 | 1 | -- | -- | 1 | 7 | 1 | 1 | -- | 1 | -- | -- | 8 | 9 | 4 | 1 | -- | 4 |
| 27. | திருவண்ணாமலை | 2 | 1 | -- | -- | -- | -- | 2### | 1 | -- | 1 | 1 | -- | 1 | 6 | 1 | -- | -- | 1 | -- | -- | 8 | 7 | 2# | -- | -- | 2 |
| 28. | திருவாரூர் | 1 | -- | -- | -- | -- | -- | 1 | 1 | -- | 1 | -- | -- | 1 | 3 | -- | -- | -- | 1 | -- | -- | 3 | 4 | 2# | -- | -- | 3 |
| 29. | வேலூர் | 4 | 1 | -- | 2 | -- | -- | 2### | 1 | -- | 1 | 1 | -- | 1 | 8 | 1*** | 2 | -- | 1 | 1 | -- | 10 | 16@ | 2# | -- | -- | 4 |
| 30. | விழுப்புரம் | 4 | 1 | -- | -- | 1 | -- | 2### | 1 | 1 | 1 | 1 | -- | 1 | 9 | 3 | -- | 1 | 1 | -- | -- | 15 | 11 | 2# | 1 | 1 | 2 |
| 31. | விருதுநகர் | 3 | 1 | -- | -- | -- | -- | 1 | 1 | -- | 1 | 1 | -- | 1 | 6 | -- | -- | -- | 1 | -- | -- | 5 | 8 | 2# | 1 | -- | 3 |
| | **மொத்தம்** | **92** | **17** | **2** | **13** | **8** | **4** | **43** | **31** | **10** | **31** | **15** | **3** | **33** | **173** | **18** | **6** | **7** | **31** | **11** | **2** | **210** | **240** | **66** | **21** | **10** | **82** |
| | | **மாவட்ட நீதிபதி - 269** | | | | | | | | | | | | **முதுநிலை உரிமையியல் நீதிபதி - 281** | | | | | | | | **உரிமையியல் நீதிபதி - 629** | | | | | |

**மொத்த நீதிமன்றங்களின் எண்ணிக்கை - 1179**

* இன்றியமையா பொருட்கள் சட்டத்தின் கீழ் இயங்கும் ஒரு தனி நீதிமன்றம் உட்பட

\# ஒரு கூடுதல் மகளிர் நீதிமன்றம் உட்பட (குற்றவியல் நடுவர் தரத்தில்)

** இனக் கலவர வழக்கு தொடர்பான சிறப்பு நீதிமன்றம் உட்பட

\#\# முதலீட்டாளர்கள் பாதுகாப்புச் சட்டம் தொடர்பான ஒரு தனி நீதிமன்றம் உட்பட

*** மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தீர்ப்பாயம் உட்பட

\#\#\# மாவட்ட நீதிபதி தரத்தில் ஒரு விரைவு நீதிமன்றம் உட்பட

*# குடியுரிமை பாதுகாப்பு சட்ட தனி நீதிமன்றம் உட்பட

@ சந்தனக்கட்டை மற்றும் வனக் குற்றங்களுக்கான சிறப்பு நீதிமன்றங்கள் உட்பட

$ சிலை திருட்டு வழக்குகளுக்கான நீதிமன்றம் உட்பட

## பிற்சேர்க்கை-IV

## நில அபகரிப்பு வழக்குகளுக்கான தனி நீதிமன்றங்களின் விவரம்

| வ. எண் | மாவட்டம் / இடத்தின் பெயர் | நீதிமன்றங்களின் எண்ணிக்கை | வ. எண் | மாவட்டம் / இடத்தின் பெயர் | நீதிமன்றங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1. | சென்னை | 2 | 12. | சேலம் | 1 |
| 2. | கோயம்புத்தூர் | 1 | 13. | தஞ்சாவூர் | 1 |
| 3. | கடலூர் | 1 | 14. | நீலகிரி @ உதகமண்டலம் | 1 |
| 4. | தருமபுரி | 1 | 15. | தேனி | 1 |
| 5. | ஈரோடு | 1 | 16. | திருச்சிராப்பள்ளி | 1 |
| 6. | கரூர் | 1 | 17. | தூத்துக்குடி | 1 |
| 7. | கிருஷ்ணகிரி | 1 | 18. | திருநெல்வேலி | 1 |
| 8. | மதுரை | 1 | 19. | திருப்பூர் | 1 |
| 9. | நாமக்கல் | 1 | 20. | திருவள்ளூர் | 1 |
| 10. | பெரம்பலூர் | 1 | 21. | விழுப்புரம் | 1 |
| 11. | இராமநாதபுரம் | 1 | 22. | விருதுநகர் | 1 |
| | | | | மொத்தம் | 23 |

**அட்டவணை- V**

- **இயக்குநர்**
  - **இணை இயக்குநர் (நிர்வாகம்)**
  - **இதழ் ஆசிரியர் (வெளியீடுகள்)**
  - **துணை இயக்குநர், சென்னை**
    - 1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் 2.சிறப்பு அரசு வழக்கு நடத்துநர் 3.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 4.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2
  - **துணை இயக்குநர், காஞ்சிபுரம்**
    - 1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 3.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2
    - **உதவி இயக்குநர், ஆலந்தூர்** அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2
    - **உதவி இயக்குநர், திருவள்ளூர்** 1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் 2. அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 3. அரசு உதவி வழக்கு நடத்துநர்
  - **துணை இயக்குநர், வேலூர்**
    - 1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 3. அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2
    - **உதவி இயக்குநர், திருவண்ணாமலை** 1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 3. அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2
  - **துணை இயக்குநர், கடலூர்**
    - 1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 3.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2
    - **உதவி இயக்குநர், விழுப்புரம்** 1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 3.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2
  - **துணை இயக்குநர், சேலம்**
    - 1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 3. அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2
    - **உதவி இயக்குநர், நாமக்கல்** 1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 3. அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2
    - **உதவி இயக்குநர், தர்மபுரி @கிருஷ்ணகிரி** 1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 3. அரசு உதவி வழக்கு நடத்துநர்
  - **துணை இயக்குநர், கோயம்புத்தூர்**
    - 1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 3. அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2
    - **உதவி இயக்குநர், ஈரோடு** 1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 3. அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2
    - **உதவி இயக்குநர், நீலகிரி** 1.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 2.அரசு உதவி வழக்கு நடத்துநர்
  - **துணை இயக்குநர், திருச்சி**
    - 1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 3. அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2
    - **உதவி இயக்குநர், புதுக்கோட்டை** 1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 3. அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2
    - **உதவி இயக்குநர், பெரம்பலூர்** 1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 3. அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2
  - **துணை இயக்குநர், தஞ்சாவூர்**
    - 1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 3. அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2
    - **உதவி இயக்குநர், நாகப்பட்டினம்** 1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 3. அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2
  - **துணை இயக்குநர், மதுரை**
    - 1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 3. அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2
    - **உதவி இயக்குநர், திண்டுக்கல்** 1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 3. அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2
    - **உதவி இயக்குநர், விருதுநகர்** 1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 3. அரசு உதவி வழக்கு நடத்துநர்
  - **துணை இயக்குநர், சிவகங்கை**
    - 1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 3. அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2
    - **உதவி இயக்குநர், ராமநாதபுரம்** 1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 3. அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2
  - **துணை இயக்குநர், திருநெல்வேலி**
    - 1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 3. அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2
    - **உதவி இயக்குநர், தூத்துக்குடி** 1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 3. அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2
    - **உதவி இயக்குநர், நாகர்கோவில்** 1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 3. அரசு உதவி வழக்கு நடத்துநர்



ரூ.118.90 இலட்சத்தில் நாமக்கல் மாவட்டம், நாமக்கல்லில் உள்ள பெருந்திட்ட வளாகத்தில் நில அபகரிப்பு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம் மற்றும் நடமாடும் நீதிமன்றம் ஆகியவற்றுக்கான குற்றவியல் நடுவர்களுக்காக கட்டப்பட்ட குடியிருப்பு கட்டடம்.



ரூ.347.13 இலட்சத்தில் கரூர் மாவட்டம், கரூரில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வாளகத்தில் பாதிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் சிறார் சாட்சிகளை விசாரிப்பதற்கான பெருந்திட்ட வளாகத்தில் கட்டப்பட்ட மையம்.



ரூ.585.90 இலட்சத்தில் கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளியில் கட்டப்பட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாக கட்டடம்.

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை—600 001.